

# ஸ்ரீ காமகோடி ப்ரதீபம்

மார்கழி - தை

ஜனவரி - 2021

மலர் 10 இதழ் 1

பொருளடக்கம்


| | |
|---|---|
| ஆசிரியர் பக்கம் | 3 |
| வண்டு ஸ்தோத்ரம் | 5 |
| பூஜ்யஸ்ரீ சந்த்ரசேகரேந்த்ர ஸரஸ்வதி ஸங்கராசார்ய ஸ்வாமிகள் | |
| நீதிக் கதைகள் | 7 |
| பூஜ்யஸ்ரீ ஜயேந்த்ர ஸரஸ்வதி ஸங்கராசார்ய ஸ்வாமிகள் | |
| அனுக்கிரஹ பாஷணம் | 10 |
| பூஜ்யஸ்ரீ சங்கர விஜயேந்த்ர ஸரஸ்வதி ஸங்கராசார்ய ஸ்வாமிகள் | |
| பீஷ்மஸ்தவராஜம் - 1 | 13 |
| ஸ்ரீ தேவி பாகவதம் | 15 |
| ஸ்ரீ மடம் முகாம் நிகழ்ச்சிகள் | 18 |
| மஹா பெரியவாளின் நினைவு மஞ்சரீ - 32 | 22 |
| பகவத்கீதையின் அமைப்பு | 26 |
| இறைவனை நம்புவதற்கு ஏழு காரணங்கள் | 27 |
| தை மாத விசேஷ தினங்கள் | 31 |
| புராணக்கதை | 32 |
| வேதாந்த ஸாரம் | 34 |
| மகாபாரத சுருக்கம் | 36 |
| அத்வைத வினா - விடை | 38 |
| ஜய தேவர் அருளிச் செய்த பஜகோவிந்தம் | 40 |
| ஸ்ரீ பாகவதம் காட்டும் வாழ்க்கை நெறி -1 | 43 |
| ப்ரபோ சிந்தாமணி-1 | 44 |
| சிந்தனை - 1 | 45 |
| ஸனாதன தர்மம் : கேள்வி பதில்கள் | 47 |


भाग्योदयेन बहुजन्मसमार्जितेन सत्संगमं च लभते पुरुषो यदा वै।
अज्ञानहेतुकृतमोहमदान्धकारनाशं विधाय च सदोदयते विवेकः।।

Man obtains the contact of saints only when the merits earned by him through many births ripen. Wisdom dawns in the wake of such contact dispersing the darkness of infatuation and arrogance which have their root in ignorance.


நிர்வாகக் குழு

ஸ்ரீ N. சிவராமகிருஷ்ணன்

ஸ்ரீ K. ஜயராமகிருஷ்ணன்

டாக்டர் வெங்குடி B. ரிஷிகேசன்

டாக்டர் G. சங்கரநாராயணன்




## ஸ்ரீ காமகோடி ப்ரதீபம்


கௌரவ தலைமை ஆசிரியர் :

டாக்டர் S. மணி திராவிட் சாஸ்த்ரி

ஆசிரியர் குழு :

பேராசிரியர் N.வீழிநாதன்

டாக்டர் R.கிருஷ்ணமூர்த்தி சாஸ்த்ரிகள்

பேராசிரியர் S. ஸ்ரீநிவாஸ சர்மா

ஸ்ரீ T.N. ராமசந்திரன்

ஸ்ரீ T.S. ராகவன்

பேராசிரியர் விஷ்ணுபோத்தி V.S.

ப்ரஹ்மஸ்ரீ ஸ்ரீரமண சர்மா

பேராசிரியர் ம.வே.பசுபதி

பேராசிரியர் K. ஸ்ரீநிவாஸன்



வெளியிடுவோர் :

ஸ்ரீ காஞ்சீ காமகோடி பீடத்தின் சார்பில்
ஸ்ரீகாமகோடி கோசஸ்தானம்



அலுவலக முகவரி :

ஸ்ரீ காஞ்சீ காமகோடி பீடம்
நெ.1.சாலைத்தெரு,
காஞ்சீபுரம் - 631502.
தொலைபேசி : 044 - 27233115

மின் அஞ்சல் :

kamakotipradeepam@gmail.com


சந்தா விவரம்

| | |
|---|---|
| ஒரு இதழ் | ரூ. 20/- |
| ஒரு வருடத்திற்கு | ரூ. 220/- |
| மூன்று வருடங்களுக்கு | ரூ. 600/- |
| ஐந்து வருடங்களுக்கு | ரூ. 1000/- |
| ஆயுள் சந்தா | ரூ. 5000/- |
| புரவலர் | ரூ. 10000/- |


Published by : Sri Kamakoti Kosasthanam on behalf of Sri Kanchi Kamakoti Peetam, No1, Salai Street, Kancheepuram - 631502. Ph : 044 - 27233115.

Periodicity : Monthly.

Printed at : Jaiganesh Offset, Chennai.



श्रुतिशिखरसमुत्थस्तत्त्वसंवित्प्रकाशः कलितिमिरनिवृत्त्यै कल्पमानश्चकास्तु।
शिवगुरुसुतमार्गं दीपयन् चन्द्रमौलेः शिशिरकरुणया श्रीकामकोटिप्रदीपः।।
कामकोटिप्रदीपोऽयं सतां विभ्राजतां गृहे।
यत्प्रकाशलवात्सद्यः पापध्वान्तो हतो भवेत्।।

# ஆசிரியர் பக்கம்

## ஞாயிறு போற்றுதும் ஞாயிறு போற்றுதும்

‘‘ஆதித்யனே இவையெல்லாம். ஒளி, வீர்யம், பலம், கீர்த்தி, கண், காது, சரீரம், மனம், கோபம், மனு, யமன், ஸத்யம், மித்ரன், வாயு, ஆகாசம், ப்ராணன் லோகபாலகர் ப்ரம்மா இன்னதென்று விவரிக்க முடியாத தத்வம், ***தத்*** என்றும் ***ஸத்*** என்றும் கூறப்படுவது. மெய்ப்பொருள் அன்னம், அம்ருதம், ஜீவன், உலகம் எல்லையில்லா ஆனந்தம், ஸ்வயம்பூ உயிர்களுக்கெல்லாம் அதிபதி. இப்படி ஸூர்யனை அறிபவன் ப்ரம்மாவுடன் ஸாயுஜ்ய பதவியையும் தேவர்களுடன் ஸமமான பதவியையும் ஐஸ்வர்யங்களையும் ஸமமான லோகத்தையும் அடைவான்.

‘‘உண்மையில் ஆதித்யன் அந்த பரமாத்மாவே, இந்த மண்டலம் காய்ந்து ஒளி வீசுகிறது. அங்கு ப்ரசித்தமான ரிக்வேத மந்த்ரங்கள் உள்ளன. இதில் கொழுந்து விட்டு எரியும் ஜ்வாலைகள் எவையோ அவை ஸாம வேத மந்த்ரங்கள். அது அவைகளின் உறைவிடம். இம்மண்டலத்தில் உள்ள புருஷன் எவனோ அவன் யஜுர்வேத மந்த்ரங்களையே வடிவாயக் கொண்டவன். அது யஜுர்வேதத்தின் உறைவிடம்.

த்ரயீவித்யா என்னும் வேதம் மூன்றுமே ஆதித்ய மண்டலமாகப் ப்ரகாசிக்கிறது. அதனுள் ஹிரண்மயமான புருஷன் உறைகிறான். இப்படி ஸூர்யனை போற்றுகிறது மஹா நாராயண உபனிஷத். இந்த ஆதித்யனையே நம் தமிழ் நாட்டில் மகர சங்க்ராந்தி அன்று பொங்கல் பண்டிகையாக மக்கள் கொண்டாடுகின்றனர். ஷண்மதங்களில் யாவர்க்கும் ப்ரத்யக்ஷ தேவதையாக ஸூர்ய மண்டலம் உள்ளது.

ப்ராம்மணர்கள் தினமும் காயத்ரி தேவதையை ஸூர்ய மண்டலத்தில் ப்ரகாசிக்கும் ஸவிதாவை வணங்குகிறார்கள். இன்னும் சில இடங்களில் வைதிகர்கள் தைத்ரீய ஆரண்யகம் கூறும் ஸூர்ய நம்ஸ்காரங்களைச் செய்து வழிபடுகின்றனர். யோக முறையை அனுசரிப்பவர் ஸூர்ய நமஸ்காரங்களைச் செய்து வழிபடுகின்றனர்.


நமது பஞ்சாயதன பூஜையில் ஸூர்யனின் 12 நாமாக்களைச் சொல்லி வழிபடுகிறோம். படிக்காத பாமரர்கள் இன்றுகூட தினமும் காலையில் குளித்து திலகம் தீட்டி கிழக்குப் பக்கம் பார்த்து ஸூர்ய வந்தனம் செய்கிறார்கள். அவன் ப்ரத்யக்ஷ தெய்வம். இடையர்களும், நீர்க்குடம் ஏந்தும் பெண்களும் அவனை வணங்குவர் என்று கூறும் ஸ்ரீருத்ரம். இது நாள் வரையில் அவன் ப்ரபாவம் மங்கியிருந்தது. இப்போது Solar power மூலமாக அவனுடைய சக்தி உலகெங்கும் பரவியுள்ளது. மாற்றுச் சக்தியாக ஸூர்ய சக்தி மக்களுக்கு அனுக்ரஹம் செய்கிறது.

நாம் தான் பஞ்ச பூதங்களையும் அவமதித்து வருகிறோம். எனவே வழிபாடு என்று வரும்போது பெரிய அளவில் இல்லாவிட்டாலும் தினம் எல்லாரும் ஸூர்யனுடைய 12 நாமாக்களைச் சொல்லி வணங்குவது உத்தமம். (இது பற்றி தனியாகக் கொடுத்திருக்கிறோம்.) இந்த பொங்கல் நன்னாளில் அனைத்து மக்களும் நன்மை எய்திட இளங்கோவடிகள் போற்றியபடி நாமும் ஞாயிறு போற்றுவோம் ஞாயிறு போற்றுவோம். எங்கும் மங்களம் தங்குக என்று கூறிக்கொண்டு இவ்விதழை ஸ்ரீசரணர்கள் பொற்பாதத்தில் ஸமர்ப்பிக்கிறோம்.

## வாசகர்களுக்கு விண்ணப்பம்

## காமகோடி ப்ரதீபம்

10ஆவது வருஷத்தில் அடியெடுத்து வைக்கிறது.
நமது கொள்கையின்படி வேத சாஸ்த்ர வேதாந்த விஷயங்கள்,
புதிய கோணத்தில் ஆராய்ச்சிகள் அச்சில் ஏறாத ஸ்தவங்கள் இவைகளுக்கே
முக்யத்துவம் தருகிறோம். வாசகர்கள் நிறைய சந்தாதாரர்களைச் சேர்த்து உதவி
செய்யுமாறு கேட்டுக்கொள்கிறோம். (ஆ. ர்)



- ஸம்ஸார ஜீவிதத்தில் பக்தீங்கறதும், தியாகம்கறதும் ப்ரதானம், லௌகீகமான வாழ்க்கையாக இருந்தாலும், எல்லாத்துலையும் பக்தீங்கறது முக்யம். சேவைங்கறது முக்யம்.
- பாராயணத்துனால என்ன லாபம்னா - மொத்தத்துல நல்ல அபிப்பிராயங்கள், நல்ல ஆலோசனைகள், மனுஷாளுக்கு ஒரு உயர்ந்த கொள்கைகள் மீதும், ஒரு தெளிவு ஏற்படறது. அதுக்கப்பறம் ஈஸ்வர அனுக்ரஹம் கிடைக்கறதுங்கறது அடுத்த விஷயம்.

# Á s k ì ÷uõzµ®

## ஜகத்குரு பூஜ்யஸ்ரீ சந்த்ரசேகரேந்த்ர ஸரஸ்வதி சங்கராசார்ய ஸ்வாமிகள்



தர்ம 'லா' படிதான் அவன் ' ரூல்' பண்ணுகிறான் என்றாலும், அவன் பரம கருணாநிதி, எத்தனை அபராதங்கள் பண்ணினாலும் க்ஷமிக்கிற அருள் வள்ளல், க்ருபா ஸமுத்ரம் என்றும் மஹான்கள் பாடி வைத்து விட்டுப் போயிருக்கிறார்களே! அதனால் லோக வாழ்க்கையில் மாட்டிக் கொண்டிருக்கிற நாம்–அவன் தானே இப்படி நம் மேலே மாயையைப் போர்த்தி மாட்டி வைத்திருக்கிறான்? அவனிடமே இந்த லோகத்துக் கஷ்டங்கள் தீருவதற்குப் ப்ரார்த்தனை பண்ணுவதில் என்ன தப்பு? இப்படி ஓர் அபிப்ராயம்.

எது வேண்டுமானாலும், எப்படி வேண்டுமானாலும் போகட்டும் என்று தாமரை இலைத் தண்ணீர் மாதிரி இருக்கிறவர்கள் (அல்லது அந்த மாதிரி என்றைக்காவவேனும் நாமும் ஆகவேண்டும் என்று தாபப்படுகிறவர்கள் கூட) லோகத்தில் அபூர்வமாகத்தான் இருப்பார்கள். இந்த உலக வாழ்க்கையின் கஷ்ட நஷ்டங்களைப் பொருட்படுத்துகிறவர்கள் அது தீரவேண்டும் என்று தவிக்கிறவர்கள் தான் நூற்றுக்குத் தொண்ணூறு பேர் இருப்பார்கள். இவர்களுடைய கஷ்டத்தைத் தீர்த்து வைக்க பகவானுக்கு சக்தியும் உண்டு, உரிமையும் உண்டு. அதற்கான கருணையும் அவனுக்கு நிச்சயம் உண்டு. அதனால் அவனிடம் கஷ்டத்தைத் தீர்க்கச் சொல்லி ப்ரார்த்தனை பண்ணுவது ரொம்ப ஸரியானது தான் என்று அபிப்ராயப்படுகிறவர்கள் உண்டு.

'பகவான் உனக்கு ஒரு சரீரத்தைத் தந்திருக்கிறான். குடும்பத்தைத் தந்திருக்கிறான். இவற்றை நன்றாகப் பார்த்துக் கொள்ள வேண்டிய பொறுப்பு உனக்கு இருக்கிறது; கடமை இருக்கிறது. இதற்காக டாக்டர், மேல் அதிகாரி, கடன் கொடுக்கிறவன், அவன் இவன் என்று யார் யாரிடமோ போய் நிற்கிறாயா இல்லையா? எல்லாருக்கும் மேலே இருக்கிற பகவானிடம் மட்டும் போய் நின்றால் என்ன தப்பு? வெட்கப்பட அதில் என்ன இருக்கிறது? மநுஷ்ய ரூபத்தில் உனக்கு உதவி செய்கிறவர்கள் (human agency) கூட உனக்கு ஸாதகமாக இருக்கவேண்டும் என்றால், இதை ஸாதித்துத் தரக்கூடியவன் பகவான் தானே? அதனால் மற்றவன் காலில் விழுகிறதற்கு முன்னாடி அவன் காலில்

விழு. ஒருத்தன் காலிலும் விழாமலிருக்கிற பக்குவம் உனக்கு வந்தால் அப்போது இந்த லௌகிக கஷ்ட நிவ்ருத்திக்காக நீ பகவான் காலிலும் விழாமல் இருக்கலாம்'' என்று அவர்கள் சொல்வார்கள்.

நம்மால் எதையும் ஸாதித்துக்கொள்ள முடியாது; ஈச்வர சக்தி தான் எல்லாவற்றுக்கும் மேல் பெரிதானது என்று நம்பித்தானே ஓர் 'ஆர்த்தன்'' (அதாவது கஷ்டப்படுகிறவன்) பகவானை ப்ரார்த்திக்கிறான்? இது நல்ல மனோ பாவம் தானே? இதனால் தான் இப்படிப்பட்ட மனோபாவம் படைத்தவர்களையும் பகவான் 'ஸுக்ருதின:' 'உதாரா;' என்று ச்லாகித்துச் சொல்லியிருக்கிறார் என்று வைத்துக் கொள்ளலாம்.

எதற்கும் 'நான்', 'நான்' என்று மாரைத் தட்டிக் கொண்டிருக்கிற மநுஷ்யன் ஏதோ ஓர் இடத்தில், தான் அவன் க்ருபை இல்லாமல் எதுவும் செய்ய முடியாது என்று நம்பி, அடங்கி, பணிந்து, வேண்டிக் கொள்கிறான் என்றால் அது அந்த அளவுக்கு உயர்ந்தது தான். லௌகிகமான தேவையின் பூர்த்திக்காகத்தான் இருக்கட்டும், அல்லது வேறு எந்தக் காரணத்துக்காக வேண்டுமானாலும் இருக்கட்டும், நம் எல்லோரையும்விட பகவான் பெரியவன் என்ற நம்பிக்கையோடு ப்ரார்த்தனை பண்ணுவது ஸரியானது தான் என்றே சொல்லவேண்டும். இந்த வாழ்க்கையிலேயே தர்மத்துக்கு விரோதமாக இல்லாத வரையில் ஜனங்களின் ந்யாயமான ஆசைகளாகக்கூட நானே இருக்கிறேன்' என்று பகவானே கீதையில் சொல்லியிருக்கிறான் (7 - 11): தர்மா விருத்தோ பூதேஷு காமோஸ்மி பரதர்ஷப. அதர்மமாக ஆசைப்படக் கூடாது. துராசை கூடாது. தர்மமான ஆசைகள் இருந்தால் அதை பகவானும் அந்த ஸ்டேஜில் ஒத்துக் கொள்வார்.

'ஸரி, அப்படியானால் போதுமான அளவுக்கு (ஸௌக்யம்) இருந்தும்கூட, அதற்கும் மேல் வேண்டும் என்று ப்ரார்த்தித்துக் கொள்கிற ' அர்த்தார்த்தி'யின் ஸமாசாரம் என்ன? அவனை எப்படி பக்தர்களோடு சேர்க்கலாம்? என்ற கேள்வி எழும்புகிறது.

ஜீவனம் நடத்துவதற்கு எடுத்து அத்யாவச்யமோ அதற்கு மேல் ஒரு துரும்புகூட வைத்துக் கொள்ளாம இருப்பது தான் முறை. எது எது இல்லாவிட்டால் நம்மால் ஜீவிக்கவே முடியாதோ, அவற்றோடு நம் தேவைகளை நிறுத்திக் கொள்ள வேண்டும் என்பதுதான், தர்ம சாஸ்த்ரங்களில் சொல்லியிருக்கிற அபரிக்ரஹம் என்ற உயர்ந்த கொள்கை. ஆகையால், வாழ்க்கை நடத்துவதற்கும் போதுமான அர்த்தம் (பொருள்) இருந்தும் அதற்கு மேல் ஒருத்தன் (அர்த்தார்த்தி) பகவானிடம் ப்ரார்த்திக்கிறான் என்றால் அது பேராசைதான் எனவே அது தப்பு தான்.

(தொடரும்)

# நீதிக் கதைகள்

## ஜகத்குரு பூஜ்யஸ்ரீ ஜயேந்த்ர ஸரஸ்வதி சங்கராசார்ய ஸ்வாமிகள்

# தாரை



### மனைவியின் போதனை

தேவர்களும் அசுரர்களும் அமுதத்தைப் பெறுவதற்காகப் பாற்கடலைக் கடைந்தபோது கிடைத்த செல்வங்களுடன் தாரை என்ற வானர குலப் பெண்ணும் தோன்றினாள். அவளது இடது கரம் பற்றிய சுஷேணனை அவளுடைய தந்தையாக தேவர்கள் நியமித்தனர். அவளுடைய வலது கரம் பற்றிய வாலி அவளுடைய கணவன் ஆனான்.

கிஷ்கிந்தையில் வாலி ஆட்சி புரிந்து வந்தபோது மயனுடைய மகனான மாயாவி என்பவன் வாலியைப் போருக்கு அழைத்தான். வாலியால் துரத்தப்பட்ட மாயாவி ஒரு குகைக்குள் புகுந்து விட்டான். வாலியும் அவன் பின் சென்றான். ஏறத்தாழ ஓராண்டு சென்றது. குகையிலிருந்து இரத்தப் பெருக்கும் கதறலின் ஒலியும் வெளி வந்தன. குகைக்கு வெளியே காத்திருந்த வாலியின் தம்பியான சுக்ரீவன் வாலி மரித்தான் என நினைத்து குகையின் வாயிலை அடைத்து விட்டு, வாலிக்கு ஈமக் கடன்களைச் செய்து விட்டு கிஷ்கிந்தையை ஆண்டு வந்தான். வானர குல மரபின் படி, தாரையும் சுக்ரீவனுக்கு மனைவியானாள். குகையில் மாயாவியை வீழ்த்திய வாலி மூடியிருந்த கற்சுவரைத் தகர்த்து கிஷ்கிந்தைக்கு வந்த போது சிங்காசனத்தில் சுக்ரீவன் தன் மனைவி ரூமையுடனும் தாரையுடனும் வீற்றிருக்கக் கண்டு அவனைத் தாக்க நெருங்கினான். சுக்ரீவன் தன் தமயனுக்கு அடிபணிந்து நிகழ்ந்தவற்றினை எடுத்துக் கூறி அமைச்சர்கள் தன்னை வற்புறுத்தி ஆட்சி பீடத்தில் அமர்த்தியதையும் சுட்டிக்காட்டி மன்னிப்புக் கோரினான். எனினும் வாலி, சினம் மேலிட்டு அவனை அடித்துத் துரத்தி விட்டு அவனுடைய மனைவி ரூமையையும் கவர்ந்து ஆட்சி புரியத் தொடங்கினான்.

சீதையை இராவணன் கவர்ந்து சென்றதும், இராமனும், இலக்குமணனும் அவளைத் தேடி அலையும் போது சுக்ரீவனையும் அனுமனையும் கண்டனர். இராமனும் சுக்ரீவனும் அக்னி சாட்சியாக நட்பு பூண்டனர். அதன் விளைவாக சுக்ரீவனுக்கு இராமன் உதவ வேண்டியதாயிற்று. சுக்ரீவன் வாலியைப் போருக்கு அழைத்து முதல் முறை தோற்றான். மறுமுறை அடையாளத்திற்காக மலர்களைத் தலையில் புனைந்து மீண்டும் வாலியுடன் போரிடச் சென்றான். வாலி போருக்கு எழும் போது அம்முறை தாரை அவனைத் தடுத்தாள். முதன் முறை அடிபட்டு அவ்வளவு விரைவாக சுக்ரீவன் திரும்பியதைத் தாரை சுட்டிக் காட்டி, மேலும் சுக்ரீவனின் தொனியிலிருந்து அவனுக்கு உறுதியேற்பட்டது அன்னியர் உதவியால்தான் என்றும், மேலும் தான் கேள்விப்பட்டபடி தசரத ராமனின் உதவி சுக்ரீவனுக்கு இருப்பதாகவும் கூறி, வாலி போருக்குச் செல்லாமல் தம்பியை மன்னித்து விடக் கோரினாள். இராமன் அறம் வழுவாதவன் என்பதனை விளக்கி அவனுடன் நட்புக் கொள்ளுமாறு வாலியை வற்புறுத்தினாள்.


தாரையின் போதனையை மீறி போருக்குச் சென்ற வாலி இராமனின் கணையால் அடிபட்டான். இராமன் விவாதித்து முடிவில் இராமனுடன் அறத்தின் வடிவினனே என்று கூறி உயிர் நீத்தான். தாரை களம் செல்லக் கூடாதென அமைச்சர் கூறியும் உயிர் நீத்த கணவனுடன் தானும் உயிர் நீக்க விரும்புவதாகக் கூறிய தாரை இராமனிடம் வாலியைக் கொன்ற வாளினால் தன்னையும் வானுலகு அனுப்பக் கோரினாள். ஆயினும் இராமன் அதற்கு ஒப்பவில்லை. அவளுடைய மகன் அங்கதனை இளவரசனாக்கி, இருவரையும் சுக்ரீவனிடம் ஒப்பு வித்தான்.

மீண்டும் அரசாட்சிக்கு வந்த சுக்ரீவன் சிற்றின்பத்தில் ஈடுபட்டு இராமனுக்குத் தான் செய்த வாக்குறுதியை மறந்தான். மாரிக் காலம் முடிந்தது. சீதையைத் தேடிச் சென்று கண்டு பிடித்து அரக்கர் மீது படையெடுக்க வேண்டியிருக்க, சுக்ரீவன் சும்மாயிருப்பது கண்டு இராமன் வெகுண்டு இலக்குமணனை அவனிடம் அனுப்பினான். சினத்துடன் வந்த இலக்குமணனை அமைதிப்படுத்தும் பணியைத் தாரையே மேற்கொண்டு சுக்ரீவனைக் காத்தாள்.

முன்னம் விசுவாமித்திர முனிவரின் கடுந்தவத்தைக் கலைக்க விரும்பிய தேவேந்திரன் கிருதாசி என்னும் தேவ நாட்டிய மங்கையை அனுப்பினான். அவளுடன் பத்து ஆண்டுகள் செலவிட்டதை அந்த முனிவர் ஒருநாள் என்று எண்ணி மயங்கியதைத் தாரை சுட்டிக்காட்டி தவ முனிவர்களே புலன் நுகர்வுக்கு அடிமையாகும் போது அற்ப வானரரான சுக்ரீவன் எம்மாத்திரம் என்று கூறி அவனை மன்னிக்க வேண்டினாள். மேலும் பெரும் படைகளைத் திரட்ட

நான்கு திக்கிலும் சுக்ரீவன் செய்திகளுடன் ஆட்களை அனுப்பி விட்டதாகவும் விளக்கி இலக்குமணனின் சினத்தை ஆற்றினாள்.

வானர குல வழக்கப்படி, வாலியையும் பின்பு சுக்ரீவனையும் சார்ந்து வாழ்ந்தாள் தாரை. ஆயினும் எல்லோருக்கும் நன்மை விரும்பியதுடன், இராமனுடைய தெய்வத் தன்மையை உணர்ந்த சிறப்பையும் பெற்றவள் அவள். எனவே சீதை மீண்டும் அயோத்திக்குத் திரும்பும் போது இலங்கையில் இருந்து கிளம்பிய புஷ்பக விமானத்தில் கிஷ்கிந்தையில் இருந்த தாரையையும் அழைத்துச் சென்றாள். இராமனின் முடிசூட்டு விழாவின் போது, கௌஸல்யை அவளை அணிகலன்கள் முதலியவற்றால் அலங்கரித்தாள்.



■தர்மத்தை அனுஷ்டானம் செய்வதற்கு, ஆரோக்யமான சரீரம் வேண்டும்.

■ஸஹஸ்ர நாமங்களே, அஷ்டோத்தரங்களே, புராணங்களே எல்லாவற்றிலேயும், ஆரோக்யம் என்பதைப் பற்றிய ஒரு ஆழ்ந்த கருத்து, ஆரோக்யமாக இருக்க வேண்டும் என்பதிலே ஒரு அனுகூலமான கருத்து இருந்து வருகிறது. ஆரோக்யமாக இருக்க வேண்டும் என்பதிலே ஒரு அனுகூலமான கருத்து இருந்து வருகிறது.

■ஆயுர்வதேம் படிப்பவர்கள் M.B.B.S. பற்றி தெரிந்து கொள்வதற்கும், M.B.B.S. படிப்பவர்கள் ஆயுர்வேதம் பற்றி தெரிந்து கொள்வதற்கும் முயற்சி செய்து பார்க்கலாமா என்ற எண்ணம் தோன்றி வருகிறது.


■ கடமை, பக்தி, ஞானம், ஒற்றுமை எல்லாம் சேர்ந்திருக்கும் போது நல்ல மனித சமுதாயமே உருவாகிறது.

# அனுக்கிரஹ பாஷணம்

## பூஜ்யஸ்ரீ சங்கர விஜயேந்த்ர ஸரஸ்வதி சங்கராசார்ய ஸ்வாமிகள்

## இந்து சமய கலை, கலாசார விழா

***05.06.2019 முதல் 10.06.2019 வரை***



**माता च पार्वति देवी पिता देवो महेश्वर : ।**
***மாதாச பார்வதீ தேவீ பிதா தேவோ மகேஸ்வர:***

**बाध्वा : शिव भक्थाच्ज स्वदेशो भुवनत्रयम् ।**
***பாந்தவா சிவபக்தாஸ்ச ஸ்வதேஸோ புவனத்ரயம்***

**நமச்சிவாய வாழ்க நாதன்தாள் வாழ்க**
**இமைப்பொழுதும் என் நெஞ்சில்**
**நீங்காதான் தாள்வாழ்க.**

*இந்த கலைவிழாவின் இன்றைய நிகழ்ச்சியாக சைவாகமங்களைப் பற்றிய நிகழ்ச்சி நடைப் பெற்றுக் கொண்டு இருக்கிறது. இதிலே பலரும் கலந்து கொண்டு, ஆகமம் தொடர்புடைய பல அறிய கருத்துக்களை எளிமையாக எடுத்து உரைத்து, இன்றைய நிலையிலே கோவிலில் இருக்கக்கூடிய ஆர்வம் வளர்ந்து இருக்கக்கூடிய நிலையிலே, எப்படியெல்லாம் மேன்மேலும் நிகழ்ச்சிகளை சிறப்பாக நடத்த முடியும் என்ற பல யோசனைகள அளித்து இருக்கிறார்கள்.*

*பொதுவாக நம்முடைய நாட்டிலே கல்வி அறிவு வளர்ந்து வருகிறது. ஏற்கனவே, இது படித்தவர்களின் இடம் தான். எழுத்து மூலமாக இல்லாமல், கைத்தொழில் மூலமாக, பரம்பரை ஞானத்தின் மூலமாக, அனுபவ அறிவு மூலமாக, பல மேதாவிகள் இருந்து கொண்டு இருந்தாலும், பட்டம், மேற்படிப்பு, ஆராய்ச்சி, என்ற நிலையிலேயும் இன்றைக்கு படிப்பு தொடர்ந்து கொண்டு இருக்கிறது.*

*பள்ளி இரண்டு விதமான படிப்புகள். ஒன்று தொழில் சம்பந்தப்பட்ட வியாபாரம் சம்பந்தப்பட்ட தொழில்கள். இரண்டாவது படிப்பு, சாஸ்திரம், கோவில்கள்*

சம்பந்தப்பட்ட படிப்பு, கலைகள் சம்பந்தப்பட்ட படிப்பு, இந்த வேதங்கள், உபநிஷத்துக்கள், ஆகமங்கள், வியாகரணம், சாஸ்திரங்கள், மீமாம்ஸா, எதார்த்தம், தர்க்கம், யோகம், ஜோதிஷம், ஆயுர்வேதம், தந்திர வித்தை, இப்படி பல சாஸ்திரங்கள், சங்கீதம், நாதஸ்வரம், அறுபத்தி நான்கு கலைகள், இப்படியெல்லாம் கலாச்சார சம்பந்தப் பட்ட படிப்புகள் நிறைய இருக்கின்றன.

அந்தக் கலாச்சார சம்பந்தப் பட்ட படிப்புகளை, நாம் பிரசாரம் செய்தால், இவர் சொன்னாரே, கலைகளையும் வளர்க்க வேண்டும், கலைஞர்களையும் ஊக்குவிக்க வேண்டும். அந்த ரீதியிலேயும் இந்த நிகழ்ச்சிகளை மேன்மேலும் சிறப்பாக நம் நாட்டிலே நடத்த வேண்டும். இது தர்மம் சம்பந்தப்பட்ட விஷயம், பாரத தேசம் என்பது புண்ணிய பூமி. கன்யாகுமரியில் இருந்து ஹிமயமலை வரையிலே, பல திவ்யக்ஷேத்திரங்கள்- கைலாஸ், மானசரோவர்- இப்படி நம்முடைய நாடு, நாட்டை ஒட்டி இருக்கக் கூடிய நேபாளம் போன்றவைகள் எல்லாம் தர்மத்தை சாஸ்திரங்களை போதித்த பூமி. அதனால்தான் இங்கு இருக்கக் கூடிய மக்களுடைய குடும்ப வாழ்க்கையிலிருந்து சிந்தனைகள் எல்லாம் பக்தியை நோக்கி இருக்கின்றன. சேவையை நோக்கி இருக்கின்றன. அமைதியை நோக்கி இருக்கின்றன. சமாதானத்தை நோக்கி இருக்கின்றன. மதம், வீரம் என்றெல்லாம் இருந்தாலும், சாந்தி, அன்பு என்பதை முக்கியமாக வைத்து இவர்களுடைய செயல்பாடு இருக்கிறது. எல்லோரும் புத்திசாலிகள்தான், தைரியமானவர்கள்தான், வீரமானவர்கள்தான், ஆனாலும் அமைதியாக இருக்க வேண்டும்.

இந்த அரிதான மானிடப் பிறவியிலே, அரிதரிது மானிடராய் பிறத்தல் அரிது, என்று சொல்லக் கூடிய மானிடப் பிறவியிலே, நாம் நல்ல செயல்களைச் செய்து புண்ணியத்தைப் பெற வேண்டும். அதுதான் நம்முடைய முக்கியமான குறிக்கோள் என்பதை மனதிலே கொண்டு, அதற்கு முக்கியத்துவம் கொடுத்து, புண்ணியத்திற்கு முக்கியத்தவம் கொடுத்து, சேவைக்கு முக்கியத்துவம் கொடுத்து, பக்தி, த்யானம், அதிதி ஸத்காரம்- வீட்டிற்கு வரக்கூடிய விருந்தினர்களை உபசரிப்பது, கோவிலுக்கு வரும் பக்தர்களுக்கு பிரசாதம் அளிப்பது, இப்படியாக, யான் பெற்ற இன்பம் இந்த வையகமும் பெற வேண்டும் அதுதான் இந்த சமயத்தினுடைய நோக்கம். தான் பெற்ற இன்பம் மட்டுமல்ல, தனக்கு இன்பம் இல்லாவிட்டாலும், வருபவர்களை கௌரவிக்க வேண்டியது தான் நம்முடைய நாட்டினுடைய ஆழ்ந்த நம்பிக்கையாக இருந்து வருகிறது. வீட்டில் இருப்பது குறைவோ, அதிகமோ, வந்தவர்களை திருப்தியாக அனுப்ப வேண்டும் என்கிற ஒரு எண்ணம் தான் மேலோங்கி நிற்கிறது. நமது

குடும்பத்தில் இருக்கக்கூடிய தாய்மார்களுடைய எண்ணங்களும் சரி, கோவிலில் பூஜை பண்றவர்களாக இருந்தாலும் சரி, கோவிலில் பூஜை பண்றவர்களின் வீட்டில் சார்ந்தவர்கள், வரக்கூடியவர்களுக்கு திருப்தியாக பிரசாதம் அளிக்க வேண்டும் என்பதற்காக அவர்களுடைய முயற்சி-ஏற்கனவே சொன்னோம், ஒரு நிகழ்ச்சிக்கு வந்த போது-அறுபத்தி நான்கு தம்பதிகளுக்கு, ஒரு தம்பதி பூஜை என்று பூந்தமல்லியில் ஏற்பாடு செய்திருந்தார்கள். மதுரவாயிலிலே, பெங்களூரில் இருந்து வந்து ஏற்பாடு செய்திருந்தார்கள். தீட்சித் அவர்களால், அந்த நிகழ்ச்சியில் சொல்லும் போது, கிராமத்திலே இடைப்பட்டக் காலத்திலே. எவ்வளவு அன்பாகவும், அக்கறையாகவும், அன்புடனும், பொறுப்புடனும் நடந்து கொண்டார்கள். இந்த சிவாச்சாரியார்கள் சமூகமானது சிவ பூஜைகளை விடாது, நல்ல முறையிலே செய்து வந்து கொண்டு இருக்கிறார்கள் என்று அன்றைய நிகழ்ச்சியில் சொன்னோம்.

இன்றைக்கும் பல கோவில்களிருந்தும், திருக்கோவில்களிருந்தும் சிறப்பாக வந்து கலந்து கொண்டு இருக்கிறார்கள். சீர்காழியிலே ஞானசம்பந்தர் இல்லம் என்பதாக, பெரியோர்கள் ஆரம்பித்த இந்த சிவாகம் நல்ல முறையிலே, கண்ணப்ப சிவாச்சாரியார் பொறுப்பிலே, நடைபெற்று வருகிறது. அங்கு தேவாரம் சொல்லித் தரப்படுகிறது. ஆகமம் சொல்லித் தரப்படுகிறது. உபன்யாசம் செய்வதற்கும், பிரசங்கம் செய்வதற்கும் பயிற்சி அளிக்கப் படுகிறது. ஏனென்றால், இன்று ஆர்வமும், அக்கறையும் இருக்கிறது. அதைப் பற்றிய அறிவு தேவைப்படுகிறது. மக்களுக்கு இருக்கும் கோவிலுக்கு செய்யணும், கும்பாபிஷேகத்திற்கு செய்யணும், லக்ஷார்ச்சனை செய்ய வேண்டும், மண்டலாபிஷேகம் செய்ய வேண்டும், நவராத்திரி உற்சவம் செய்ய வேண்டும், புதிதாக தேர் விமானம் செய்ய வேண்டும் என்ற ஆர்வம் பொது மக்களின் மத்தியிலே வந்து கொண்டு இருக்கிறது. ஆதரவும் வந்து கொண்டு இருக்கிறது. அந்த நேரத்திலே சரியானபடி மக்களுக்கு விளக்கம் தெரிவிப்பதற்காக, அப்பொழுது தான் இந்த ஆன்மிக விளக்கை எல்லா இடத்திலேயும் ஏற்றி வைக்க முடியும் என்பதற்காக பிரசங்கம் பாலபிஷேகம் எதற்காக செய்யணும், தயிர் அபிஷேகம் எதற்காக செய்யணும், தேன் அபிஷேகம் எதற்காக செய்யணும், தேனபிஷேகம் செய்வதனால் வரும் பயன் என்ன, இதெல்லாம் சொல்லி, முறைகளையும் பலன்களையும் விளக்கி, பிரசங்கப் பயிற்சியும் அளிக்கப்படுகிறது.

(தொடரும்)

# பீஷ்மஸ்தவராஜம் - 1

*வீராபுரம் சம்பத் தீக்ஷிதர்*

*இந்த ஸ்தவம் மகாபாரதத்தில் அனுசாஸன பர்வத்தில் 75ஆம் சர்கத்தில் பீஷ்மர் க்ருஷ்ணனை துதிப்பதாக உள்ளது. க்ருஷ்ணனின் பரம்பொருள் தத்வம் பற்றி பேசுகிறது.* **இதுவரை அச்சானதாகத் தெரியவில்லை. காமகோடி ப்ரதீபத்தில் அச்சேற்றுவதற்கு பெருமைபடுகிறோம். ஸ்ரீ தீக்ஷிதர் அவர்களுக்கும் எமது நன்றிகள்.**

भीष्मस्तु पुरुषव्याग्रः कर्मणा मनसा गिर
शरतल्पगतः कुष्णम् प्रदधौ प्रान्जलि; शुचिः ।। १
¥ è © ì x ¦ ¸ å Æ¯õUµ:Pº© n õ ©Ú é õ Qµõ
\µuÀ£ Pu: U ¸ è n ® ¨µuzöu Í ¨µõ g \¼; _ ] ;

*அம்புப் படுக்கையில் இருந்த மனிதர்களில் சிறந்த பீஷ்மரானவர் கண்ணனை தூய்மையாக மனம் வாக் செயல்களால் கை கூப்பி வணங்கினார்.*

स्वरेण हुश्टः पुष्टेन तुष्ताव मधुसूदनम्
योगेस्वरम् पद्मनाभम् विष्णुम् जिष्णुम् जगत्पतिम् ।। २
ì Á÷µ n ð ¸ è h: ¦ è ÷h Ú x è hõÁ ©xö é õu Ú®
÷¯õ÷P ì Áµ® £z©Úõ£® Â è q ® â è q ® áPz£v®.

*மகிழ்ச்சியான உரத்த குரலில் மதுஸூதனனும், யோகேஸ்வரனும், பத்மனாபனும் விஷ்ணுவும், ஜிஷ்ணுவுமான உலக நாதனை துதிக்க ஆரம்பித்தார்.*

कुतान्जलि पुटो भूत्वा वागविदाम् प्रवरः पप्रभुः
भीष्मः परम धर्मा मा वासुदेवसस्तुवत् ।। ३
U ¸ uõ g \¼ ¦÷hõ §z Áõ ÁõU Â uõ® ¨µÁµ; ¨µ¦:
¥ è ©: £µ© uº©õz©õ Áõ é ú÷u Á© ì x Á z.

*அஞ்சலி பத்தராய் சொல்லின் செல்வரான பீஷ்மர் தர்மாத்ம ப்ரபுவான கண்ணனை துதிக்க ஆரம்பித்தார்.*

आरिराध्यिषुः क्रुष्णम् वाचम् जिगदिषामि यम् ।
तथा व्यास समासिन्या प्रीयताम् पुरुषोतमम् ।। ४

B ›µõz ° å û: U ¸ è n ® Áõ\® âPv è ¯õª ¯õ®
uuõ Æ¯õé é©õ ê ß¯õ ¨Ÿ¯uõ® ¦ ¸÷å õzu©®

*எம்பெருமான் கண்ணனை ஆராதிக்க முயல்கிறேன். அது சுருக்கமாகவோ விவரமாகவோ இருந்தாலும் அதனால் அவர் மகிழட்டும்.*

शुचिम् शुचिपदम् हम्सम् ततपदम् परमेष्टिनम् ।
युक्त्वा सर्वात्मना आत्मानम् तम् प्रपध्ये प्रजापतिम् ।। ४

_ ]® _ ] £u® í ®é® uz£u® £µ÷© è i Ú®
²UzÁõ é ºÁõz©Úõ B z©õÚ® u® ¨µ£z÷¯ ¨µáõ£v®.

*தூய்மையே வடிவானவரும் தூய்மை அளிப்பவரும் சாரக்ராஹியும் அந்த பரமேஷ்டியான ப்ரஜைகளுக்கு பதியை ஆத்மாக்களுக்கும் ஆத்மாவான யுக்தனை வணங்குகிறேன்.*

---

## ஸனாதன தர்மப்புதிர்கள் ஜனவரி வினாக்கள்

1. *மருண்ணீக்கியார் யார்?*
2. *விடங்கரின் பெயர்*
3. *இந்த்ரன் இலக்கணம் கற்றுத் தெளிந்த தமிழ்ப் புலவர்*
4. *பரிவ்ராஜகர் சன்ன்யாசிகள் யார்?*
5. *அந்தகஜ ந்யாயம் விளக்கம்*
6. *அம்பாள் வழிபாட்டில் வரும் விஷ்ணுவின் அவதாரம்.*
7. *சூதாடி சிவனை வழி பட்டவர்.*
8. *மனு ஸ்ம்ருதிக்கு முதலில் விளக்கம் எழுதியவர்.*
9. *வேதம் இக்கொடியின் புகழ் பாடும்.*
10. *மாஹேஸ்வர ஸூத்ரம் எது?*

# ஸ்ரீமத் தேவி பாகவதம் -10

பி. ஆர். கண்ணன்

## ஸ்கந்தம் 4



ஜனமேஜயன் கேட்டார்: 'தர்மத்திலிருந்து வழுவாத பாண்டவர், திரௌபதி ஏன் இவ்வளவு கஷ்டங்களுக்கு ஆளாயினர், ஸாக்ஷாத் கிருஷ்ணரின் மாதா, பிதா பட்ட கஷ்டங்களுக்கு அளவில்லையே' என்று. வியாஸர் சொன்னார்: அவஶ்யமேவ போக்தவ்யம் க்ருதம் கர்ம ஶுபாஶுபம்- செய்த புண்ணியமோ, பாபமோ, அந்த கர்மபலனை அனுபவித்தே தீரவேண்டும் என்றார். இந்த வரி தேவி பாகவதத்தில் அடிக்கடி வருகிறது; முக்கியமான வாழ்க்கை நெறியை போதிக்கிறது. வியாஸர் மேலும் சொன்னார்: கர்மணோ கஹநா கதி:- கர்மாவின் போக்கு ஆழமானது; உடனுக்குடன் பலனைக் கொடுக்காது. ஸ்காந்த புராணத்தில், தேவர்கள் ஏன் வெகுகாலம் சூரபத்மனிடம் துயருற்றனர் என்ற வினாவுக்கு பிருஹஸ்பதி பகவான் பதில் சொல்லும்போது, கர்மணா குடிலா கதி:- கர்மாவின் போக்கு கோணலானது என்றார். தேவர்கள் தக்ஷயக்ஞத்தில் சிவனுக்கு நடந்த அவமானத்திற்கு அப்போதே வீரபத்திரனால் சிக்ஷிக்கப்பட்டாலும், மீதமிருந்த கர்மபலனை பின்னர் சூரபத்மன் காலத்தில் அனுபவித்தனர் என்றார். கர்மாவின் போக்கு அத்தகையது; யாராலும் காணமுடியாதது. ஸத்வகுணப் பிரதானிகளான தேவர்களே அதர்மத்தில் இறங்கும்போது, ரஜோகுணம் மிகுந்த மனுஷ்யர்கள் காம, க்ரோதங்களுக்கு வசப்பட்டு அதர்மம் புரிவதில் என்ன வியப்பு என்றார் வியாஸர்.

## நர நாராயணர்கள் கதை

பிரம்மாவின் ஹ்ருதயத்திலிருந்து தோன்றியவர் தர்மர். அவருடைய நான்கு புத்திரர்களில் நரரும், நாராயணரும் இருவர். லோகக்ஷேமத்திற்காக பதரியில் சென்று கடுந்தபஸ் செய்தனர். இந்திரனுக்கு வழக்கம்போல் தன் பதவி போய்விடுமோ என்ற பயம் ஏற்படவே, நேரில் வந்து அவர்களுக்கு வரம் தர முயற்சித்தார். பலிக்காமல் போகவே, மாயையினால் சிங்கம், புலி, மழை, காற்று, அக்னி இவைகளை

ஏவிவிட்டும் தபோதனர்கள் அசையவில்லை. அவர்கள் வாக்பீஜம் காமபீஜம் ச மாயாபீஜம் ததைவ ச- ஐம், க்லீம், ஹ்ரீம் என்று தொடர்ந்த ஜபத்தில் தன்மயமாகியிருந்தனர். இந்திரன் மன்மதன், ரதி, வஸந்தம், அப்ஸரஸ்கள் எல்லோரையும் அனுப்பி தபஸிற்கு இடையூறு விளைவிக்க முயற்சித்தார். முயற்சி பலனற்றுப்போகவே, முனிவர்கள் சபித்துவிடுவரோ என்று வந்தவர்கள் பயந்தனர். அப்போது நாராயணரிஷி சாந்தமாக தன் தொடையைத் தட்டவே, அங்கிருந்து, ஊர்வசி என்ற புது அப்ஸரஸும், மற்ற சேடிகளும் தோன்றினர். அத்தனை பேரும் ஆச்சரியப்பட்டனர். நாராயணரிஷி, வந்திருந்த 16050 ஸ்திரீகளுடன், இந்த புது அப்ஸரஸ்களையும் அழைத்துக்கொண்டு தேவலோகம் திரும்பச் சொன்னார். அந்த தேவலோக ஸ்திரீகள் நாராயணரிஷியை விவாகம் செய்துகொள்ள ஆசைப்பட்டனர். நரரிஷி, இப்போது பிரம்மசரிய விரதத்தில் இருக்கும் நாராயணரிஷி அடுத்த அவதாரமாகிய கிருஷ்ணாவதாரத்தில் அந்த 16050 ஸ்திரீகளையும் விவாகம் செய்துகொள்வார் என்று சொல்லி அவர்களை அனுப்பினார். விஷயமறிந்த இந்திரன் இத்தோடு விட்டதே என்று பெருமூச்சு விட்டார்.

**ப்ரஹ்லாதன் யுத்தம்**

ப்ரஹ்லாதன் பாதாளத்தில் ராஜாவாக இருந்த சமயம். அப்போது ச்யவனரிஷி (ப்ருகு மகரிஷியின் புத்திரர்) நர்மதை நதியில் ஸ்னானம் செய்யும்போது, ஒரு ஸர்ப்பத்தினால் பீடிக்கப்பட்டு, விஷ்ணுவை பிரார்த்தித்தார். ஸர்ப்பம் விஷமற்றதாகப்போய், பாதாளத்திற்கு இழுத்துச் செல்லப்பட்டார். பிரஹ்லாதன் ஸந்நிதிக்கு கொண்டுசெல்லப்பட்டார். இந்திரனின் ஒற்றனோ என்று சந்தேகித்த ப்ரஹ்லாதனிடம், தானும் விஷ்ணுபக்தன், ப்ருகுபுத்திரன் என்று அறிமுகம் செய்துகொண்டார். ப்ரஹ்லாதன் மிக்க உபசாரங்கள் செய்தான். இருவரும் ஸத்ஸங்கத்தில் இருந்தபோது, ச்யவனர் தீர்த்தயாத்திரையின் பலன் கிட்ட, மூன்று சுத்திகள் அவசியம் என்றார்: மனஸ்சுத்தி, திரவியசுத்தி, ஆகாரசுத்தி. பூலோகத்தில் உள்ள தீர்த்தங்களுள் நைமிஷம், சக்ரதீர்த்தம், புஷ்கரம் முதலியன சிறந்தவை என்றார். ப்ரஹ்லாதன் உடனே நைமிஷம் செல்ல ஆசை கொண்டு தைத்தியர்களுடன் புறப்பட்டு, அங்கு சென்று ஸரஸ்வதி நதியில் ஸ்னானம் செய்தான். பின்னர் ஒரு அத்தி மர அடியில் இரு ரிஷிகள் - நரர், நராயணர்- தபஸ் செய்துகொண்டிருப்பதைப் பார்த்தான். ஆனால் அவர்கள் ஆயுதம் வைத்திருந்தது ஆச்சரியமாக இருந்தது. பினாகம், சார்ங்கம் என்ற இரு விற்களும் அவர்கள் எதிரில் இருந்ததைப் பார்த்த பிரஹ்லாதன் இவர்கள் உண்மையான தபஸ்விகளாக இருந்தால் ஆயுதம் எதற்கு என்று மிகுந்த கோபங்கொண்டான். அவர்களிடம் நிந்தித்துப் பேசியபோது, அவர்கள் எச்சரித்தார்கள்: ‘ஏ மந்தபுத்தியுள்ளவனே, நாங்கள் தபஸ், யுத்தம் இரண்டும் செய்யும் சாமர்த்தியம் உடையவர்கள். **ப்ரஹ்மதேஜோ துராராத்யம் ந த்வம் வேத விமோஹித:**

**விப்ரசர்சா ந கர்தவ்யா ப்ராணிபி: ஸுகமீப்ஸுபி: ।।** நீ மதிமயக்கத்தினால், பிரம்மதேஜஸ் வெல்லமுடியாதது என்பதை அறியவில்லை. சுகத்தை விரும்பும் பிராணிகள் சீலம்மிக்க அந்தணர்களுக்கு தொல்லை தரார்.' அவர்கள் சொன்னது, ஸ்ரீமத்ராமாயணத்தில் விச்வாமித்திரர், வஸிஷ்டரிடம் யுத்தம் செய்யும்போது கண்டதைப்போன்றது. அதாவது **திக்பலம் க்ஷத்ரியபலம் ப்ரஹ்மதேஜோ பலம் பலம் ந ஏகேந ப்ரஹ்மதண்டேந ஸர்வாஸ்த்ராணி ஹதாநி மே ।।** வெறும் க்ஷத்திரியனுடைய ஆயுதபலம், பிரம்மதேஜஸுக்கு முன்னால் எம்மாத்திரம். ஒரே ஒரு பிரம்மதண்டத்தினால் என்னுடைய எல்லா அஸ்திரங்களும் முறியடிக்கப்பட்டனவே என்றார். பிரஹ்லாதன் ரிஷிகள் சொன்னதைக் காதில் வாங்கிக் கொள்ளாமல் யுத்தத்தில் இறங்கவே, கடும் யுத்தம் 1000 திவ்ய வருஷங்கள் நடந்தது. விஷ்ணு வைகுண்டத்திலிருந்து வந்து, பிரஹ்லாதனிடம், 'இவர்கள் என் அம்சம். விரோதம் கொள்ளமல் பாதாளம் திரும்பு' என்றார். பிரஹ்லாதனும் அவரை வணங்கி திரும்பினான். அகங்காரமே எல்லா துன்பங்களுக்கும் காரணம் என்பதை வெகு அழகாக இக்கதையின்மூலம் வியாஸர் விளக்குகிறார்.

(தொடரும்)

# ஸ்ரீ மடம் முகாம் நிகழ்ச்சிகள்

சென்ற இதழ் தொடர்ச்சி

*26.10.2020 அன்று கேரள மாநிலத்தில் அமைந்துள்ள எடநீர் மடத்தின் புதிய பீடாதிபதியாக ஸ்ரீ சச்சிதானந்த பாரதி ஸ்வாமிகள் ஸ்ரீ ஆசார்ய ஸ்வாமிகள் முன்னிலையில் சன்யாச ஸ்வீகாரம் பெற்றுக் கொண்டார். இந்நிகழ்ச்சி காஞ்சீபுரம் அருகேயுள்ள ஓரிக்கையில் நடைபெற்றது.*

*13.11.2020 அன்று தன்வந்திரி ஜயந்தி தேசிய ஆயுர்வேத நாளாக கொண்டாடப்படுகிறது. அதை முன்னிட்டு நஸரத்பேட்டையில் உள்ள ஸ்ரீ ஜயேந்த்ர ஸரஸ்வதி ஆயுர்வேத கல்லூரியில் நடைபெற்ற விழாவில் வீடியோ கான்பரன்ஸிங் மூலம் ஸ்ரீ ஆசார்ய ஸ்வாமிகள் பங்கேற்று அனுக்ரஹ பாஷணம் வழங்கினார். தன்வந்த்ரி ஜயந்தியை முன்னிட்டு பல்வேறு ஹோமங்களும் நடைபெற்றது.*

### *14.11.2020 - தீபாவளித் திருநாள்*

*தீபாவளித் திருநாளை முன்னிட்டு அதிகாலை தேனம்பாக்கம் முகாமில் ஸ்ரீ ஆசார்ய ஸ்வாமிகள் தீபாவளி பூஜை செய்து வழிபட்டார்கள். தர்சனத்திற்கு வந்த பக்தர்களுக்கு தீபாவளி லேகியம் வழங்கி ஆசீர்வதித்தார்கள்.*

*தீபாவளியை முன்னிட்டு அதிகாலை காஞ்சிபுரம் சிவாசார்யர்கள் சுமார் 30 பேர் காஞ்சிபுரம் மற்றும் அதன் சுற்றுப்புரத்திலுள்ள நூற்றெண்பதுக்கும் மேற்பட்ட சிவன் கோவில்களுக்குச்சென்று தைலம், கங்காஜலம், மற்றும் மற்ற விசேஷ த்ரவ்யங்களினால் அபிஷேகம் செய்து, புது வஸ்த்ரம் சாற்றி ஸ்வாமிக்கு இனிப்பு மற்றும் பக்ஷணங்கள் நிவேதனம் செய்து மஹாதீபாராதனை காண்பித்து தரிசனத்திற்கு வந்திருக்கும் பக்தர்களுக்கு அதை ப்ரசாதமாக வினியோகிப்பர். இந்த தீபாவளி கைங்கர்யம் கடந்த 31 வருடங்களாக ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதிகளின் ஆக்ஞைப்படி விசேஷமாக நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது.*

### *15-11-2020*

*ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதிகளின் ஆசியுடன் தொடர்ந்து 45வது வருஷமாக ஸ்ரீ கந்த சஷ்டி பாராயணம் 15.11.20 முதல் 21.11.20 வரை ஸ்ரீமடத்தில் நடைபெற்றது.*

### *19.11.2020*

*தேனம்பாக்கம் முகாமில் நடைபெற்ற சண்டி ஹோம பூர்ணாஹுதியில் ஸ்ரீ ஆசார்ய ஸ்வாமிகள் பங்கேற்றார்கள்.*

## 21.11.20 - திருப்பதி முகாம்

*ஸ்ரீமடம் முகாம் 21.11.2020 சனிக்கிழமை காலை தேனம்பாக்கத்திலிருந்து புறப்பட்டு திருப்பதி அலிபிரி அருகேயுள்ள ஸ்ரீமடம் கிளையான மஹாபாதுகா மண்டபத்திற்கு வந்தடைந்தது. அன்று முதல் 09.12.2020 வரை ஸ்ரீ சந்த்ரமௌலீச்வரர் பூஜை பாதுகா மண்டபத்தில் நடந்தது. பூஜைக்குத் தேவையான ஏற்பாடுகளையும், சந்தர்ப்பணை ஏற்பாடுகளையும் திருப்பதி ஸ்ரீ C. கைலாஷ் அவர்கள் சிறப்பாக செய்திருந்தார்கள்.*

*திருப்பதி முகாமில் திருமலா திருப்பதி தேவஸ்தான உயர் அதிகாரிகளான* E.O., Addl E.O, Chairman, Chief Security Officer, *உள்ளூர் ப்ரமுகர்கள் போன்றோர் அவ்வப்போது வந்து ஸ்ரீ பெரியவாளை தர்சனம் செய்து தர்ம ப்ரசார சம்பந்தமாக பல்வேறு கருத்துக்களைப் பற்றி ஸ்ரீ ஆசார்ய ஸ்வாமிகளின் அபிப்ராயத்தை தெரிந்து கொண்டார்கள்.*

*25.11.2020 அன்று திருப்பதி பாதுகா மண்டபத்தில் க்ருஷ்ண யஜுர்வேத கணபாராயணம் நடைபெற்றது. பங்கேற்ற வித்வான்களுக்கு ஸ்ரீமடத்தின் மூலம் ஸம்பாவனை அளிக்கப்பட்டது.*

**திருப்பதி முகாமில் ஸ்ரீ ஆசார்யாள் தங்கியிருந்த போது தேவஸ்தானம் ஏற்பாடு செய்திருந்த பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்று ஆசி வழங்கினார்கள். அவை.**

- *26.11.2020 அன்று திருமலையில் கோவில் வளாகத்திலுள்ள வஸந்த மண்டபத்தில் துளசி விவாஹ நிகழ்ச்சி.*
- *28.11.20 அன்று திருமலை நாதநீராஞ்சன மண்டபத்தில் பகவத்கீதா த்ருதீய அத்யாய பாராயணம் - ஸ்ரீ ஆசார்ய ஸ்வாமிகள் அனுக்ரஹ பாஷணம்.*
- *30.11.20 கீழ்திருப்பதி தேவஸ்தான அலுவலகம் அருகேயுள்ள அரங்கத்தில் கார்த்திகை பௌர்ணமியை முன்னிட்டு லக்ஷ தீப ஆராதனை. அர்ச்சகர்கள் பூர்ணகும்ப மரியாதையுடன் ஸ்ரீ ஆசார்யாளை வரவேற்றார்கள். விஷ்ணு சஹஸ்ரநாம பாராயணத்துடன் தொடங்கிய நிகழ்ச்சியில் தொடர்ந்து ஸ்ரீ மஹாலக்ஷ்மி ஷோடஸ பூஜா, ஸம்ப்ரதாயா மாணவிகள் பங்கேற்ற பக்திப்பாடல்கள் நிகழ்ச்சி, எஸ்.வி.பாடசாலா மாணவர்கள் பங்கேற்ற அஷ்டலக்ஷ்மி வைபவ நிருத்ய கார்யக்ரம நிகழ்ச்சி ஆகியவை நடைபெற்றது. ஸ்ரீ ஆசார்ய ஸ்வாமிகள் தனது அனுக்ரஹ பாஷணத்தில் தீப பூஜை மற்றும் தீப தானம் ஆகியவற்றின் முக்யத்வம் குறித்து பல ஸ்லோகங்கள் மற்றும்*

வேதமந்த்ரங்கள் ஆகியவைற்றை மேற்கோள் காட்டி ஆசி வழங்கினார்கள். இந்நிகழ்ச்சி SVBC தொலைக்காட்சியில் நேரடி ஒளிபரப்பு செய்யப்பட்டது. இந்நிகழ்ச்சிக்கு ஏற்பாடுகள் T.T.D. நிர்வாகத்தினரால் ப்ரும்மாண்டமாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

- *02.12.20 புதன்கிழமையன்று ஸ்ரீ ஆசார்ய ஸ்வாமிகள் திருமலை வெங்கடாஜலபதி ஸ்வாமி தர்சனம். அன்று காலை மூன்று கால பூஜைகளையும் முடித்துக் கொண்டு காலை 9.30 மணி அளவில் மேல்திருப்பதி எழுந்தருளினார்கள். அங்கே கோவில் மரியாதையுடன் மேட்டு மண்டபம் அரச மரத்தடியிலிருந்து வேத கோஷங்கள், மங்கள வாத்யம், யானை, குடை, தீவட்டி, சடாரி, இஷ்ட கபாலம் ஆகியவற்றுடன் ஸ்ரீ ஆசார்ய ஸ்வாமிகள் கோவில் பட்டாச்சார்யர்கள் வரவேற்று தர்சனத்திற்கு அழைத்துச் சென்றனர். வழியில் பேடி ஆஞ்சனேய ஸ்வாமி சந்நிதியை தர்சனம் செய்து கொண்டு பின்பு மஹாத்வாரம் வழியாக கோவிலுக்குள் சென்று வெங்கடாஜலபதி ஸ்வாமியை தர்சனம் செய்தார்கள். மூலஸ்தானத்தில் ஸ்ரீ ஆசார்ய ஸ்வாமிகள் ஸ்ரீ வெங்கடாஜலபதி மூல விக்ரஹத்திற்கு சாமரம் வீசி ப்ரார்த்தனை செய்தார்கள். தீர்த்த ப்ரஸாதம், சடாரி சேவை செய்விக்கப்பட்டது. ஸ்வாமி சந்நிதியில் சுமார் 30 நிமிடம் அமர்ந்து ப்ரார்த்தனை செய்தார்கள். தன்னுடன் வந்த 100 சேவார்த்திகள் தர்சனம் செய்யும் வரை அங்கிருந்து விட்டு பின்பு ரங்க மண்டபத்தில் நடந்து கொண்டிருந்த யஜுர்வேத ஜடா பாராயணத்தில் கலந்து கொண்டு அனுக்ரஹ பாஷணம் வழங்கினார்கள். அங்கிருந்து புறப்பட்ட ஆசார்ய ஸ்வாமிகளுக்கு வேத கோஷங்களுடன் அதிகாரிகள் வழியனுப்பி வைத்தார்கள். பின்பு கீழ்த்திருப்பதி முகாமிற்கு வந்தடைந்தார்கள்*

- *அலிபிரி அடிவாரத்தில் திருமலா திருப்பதி தேவஸ்தானத்தின் அங்கமான கோப்ரதக்ஷிண கோசாலாவிற்கு ஸ்ரீ ஆசார்ய ஸ்வாமிகள் எழுந்தருளினார்கள். அங்கு ப்ரதிஷ்டை செய்யப்படவுள்ள ஸ்ரீ வேணுகோபால ஸ்வாமி விக்ரஹம் ஸ்ரீ ஆசார்ய ஸ்வாமிகள் முன்னிலையில் நிறுவப்பட்டது. பின்னர் அனுக்ரஹ பாஷணத்தில் கோமாதா, காமதேனு, கல்பதரு ஆகியவற்றின் பெருமையைப் பற்றி எடுத்துரைத்தார்கள். திருமலை திருப்பதி தர்சனத்திற்கு வரும் பக்தர்கள் தரிசனம் முடிந்து இந்த கோசாலையை ப்ரதக்ஷிணம் செய்யும் வகையில் இந்த கோசாலா அமைக்கப்பட்டுள்ளது.*

- *06.12.20 அன்று திருமலை நாத நீராஞ்சன மண்டபத்தில் நடைபெற்ற விராட பர்வ பாராயணத்தில் பங்கேற்றார்கள்.*

**மேலும் கீழ்த்திருப்பதி முகாமின் போது 23.11.20, 30.11.20 மற்றும் 07.12.20 ஆகிய தேதிகளில் க்ருத்திகா சோமவார பூஜை நடைபெற்றது. 26.11.20 அன்று ப்ருந்தாவன த்வாதசி ஸ்ரீமடம் முகாமில் கொண்டாடப்பட்டது**

*09.11.20 அன்று மூன்று கால பூஜைகளை முடித்துக்கொண்டு காஞ்சீபுரம் ஸ்ரீமடத்திற்கு திரும்பினார்கள். காஞ்சிபுரம் வரும் வழியில் நகரின் எல்லையான சர்வதீர்த்தக் குளக்கரையில் காஞ்சீபுரத்தின் பல்வேறு கோயில் ப்ரஸாதங்களுடன் நகர வாஸிகள் சார்பில் வரவேற்பு அளிக்கப்பட்டது. பின்னர் ஸ்ரீமடம் வந்த ஸ்ரீஆசார்ய ஸ்வாமிகள் ஸ்ரீ மஹாஸ்வாமிகள் மற்றும் ஸ்ரீ பெரியவாள் அதிஷ்டானங்களில் தீபாராதனை காட்டி வழிபட்டார்கள். உடுப்பி பேஜாவர் மடாதிபதி ஸ்ரீ பெரியவாளுடன் சந்தித்து பல்வேறு தர்மப்ரசாரங்களை பற்றி உரையாடினார்கள்.*

*10.11.2020 அன்று செங்கல்பட்டு அருகேயுள்ள ஆத்தூர் வேதபாடசாலைக்கு விஜயம் செய்த ஸ்ரீ ஆசார்ய ஸ்வாமிகள் அங்கு வேதோபாஸன மண்டபத்தை திறந்து வைத்து அனுக்ரஹித்தார்கள்.*

*11.12.2020 அன்று ஒரிக்கை மணிமண்டபத்தில் ஸ்ரீ ஆதிசங்கர தடாக ப்ரதிஷ்டா நிகழ்ச்சி நடைபெற்றது.அங்கு புதிதாக நிர்மாணிக்கப்பட்ட குளத்திற்கு தடாக ப்ரதிஷ்டை செய்யப்பட்டது. தடாக ப்ரதிஷ்டை என்பது நமது சாஸ்திரத்தில் கூறியிள்ளபடி புதிதாக நிர்மாணிக்கப்பட்ட நீர்நிலைகளுக்கு செய்யப்படும் சடங்குகளாகும். இந்நிகழ்ச்சியை முன்னிட்டு கலச ஸ்தாபனம் மற்றும் ஹோமங்கள் நடைபெற்றது. அதன்படி ஆதிசங்கர பகவத்பாதர்கள் பெயரால் நிர்மாணிக்கப்பட்ட இந்த தடாகத்தின் நான்கு புறங்களிலும் புனித கலச நீரை ஸ்ரீ ஆசார்ய ஸ்வாமிகள் தெளித்தார்கள். இந்த தடாகத்தின் நடுவே மண்டபம் எழுப்பப் பட்டுள்ளது. பின்னர் ஸ்ரீ ஆசார்ய ஸ்வாமிகள் தடாக ப்ரதிஷ்டா மற்றும் பூர்த்த தர்மத்தின் முக்யத்வம் குறித்து அனுக்ரஹ பாஷணம் அருளினார்கள். அறுகோண வடிவில் அமைந்துள்ள இந்த தடாகமானது ஆந்திர மாநிலம் கார்வேட் நகரில் அமைந்துள்ளது போன்று உருவாக்கப்பட்டுள்ளது. 1971ம் ஆண்டு சாதுர்மாஸ்யத்தை கார்வேட் நகரில் தான் ஸ்ரீ மஹாஸ்வாமிகளும் ஸ்ரீ புதுப்பெரியவாளும் அனுஷ்டித்தார்கள்.*

*14.12.2020 அன்று க்ருத்திகா சோமவாரம் (ஐந்தாவது வாரம்)ஏகாதச ருத்ராபிஷேகத்துடன் ஸ்ரீ சந்த்ரமௌலீச்வர பூஜை நடைபெற்றது.*

*தொடர்ந்து தனுர்மாத பூஜையை 16.12.2020 முதல் 14.01.2021 வரை காஞ்சீபுரம் ஸ்ரீமடத்தில் ஸ்ரீ ஆசார்யஸ்வாமிகள் நடத்தவுள்ளார்கள்.*

தொடரும்....

# மகா பெரியவாளின் நினைவு மஞ்சரி 32



பல வருஷங்களுக்கு முன் ஸர்வதீர்த்தக் கரையில் ஸ்ரீசரணர்கள் முகாம் இட்டிருந்தார்கள். அண்ணாத்துரை அய்யங்காரிடம் பெரியவர் பேசிக் கொண்டிருக்கும் போது யாரோ வெளி நாட்டவர் அவரைப் பார்க்க வந்திருப்பதாகச் சொல்ல பெரியவா வெளியில் ஒரு மரத்தடியில் உட்கார்ந்து அவரை அழைத்து வரச் சொன்னார்கள். அவர் இந்தியா வந்ததன் நோக்கமென்ன என்று வினவ பல மதத் தலைவர்களையும் வித்வான்களையும் பார்த்துவிட்டு காஞ்சி வந்துள்ளேன்.

சில கேள்விகளை நான்கேட்கலாமா என்று கேட்க பெரியவாளும் சம்மதித்தார். அவர்

**எத்தனையாண்டு முதல் பீடத் தலைவராக உள்ளீர் ?**

ஸ்வாமிகள் 1907 முதல்


அவர் **இத்தனையாண்டுகளாக உமது அனுபவமென்ன?**

ஸ்வாமிகள் சிரித்துவிட்டு மனித நாளில் சுமார் அரைப்பகுதி தூக்கத்தில் கழிந்து விடுகிறது. எஞ்சிய காலம் பூஜை, ஸ்னானம் சாப்பிடுகிறது. தர்சனத்துக்கு வந்தவர்களிடம் பேசுவது இப்படி சென்று விடுகிறது. என்னிடம் யானை, மாடு, குதிரை, சிப்பந்திகள் இப்படியாக 100 பேர் என்னுடன் உள்ளனர். இவர்களுக்காகவும் என்னை காணவருபவர்களுக்கும் சாப்பாடு போட வேண்டியுள்ளது. இதற்காக நான் பணம் சம்பாதிக்க வேண்டியள்ளது. இங்கு யானையைப் பார்க்கவும், மேள வாத்யங்கள், ஒலிப்பதை ரசிக்கவும் கூட்டமாக ஜனங்கள் வருகிறார்கள். இப்படி நான் ஸர்கஸ்காரன் மாதிரி இருக்கேன். ஜனக்கூட்டம் வந்தால்தான் எல்லோருக்கும்

சாப்பாடு போட முடியும். எனக்கு ஒன்றுமே தெரிகிறதில்லை. நிரம்ப ஜனங்களைப் பார்க்கிறேன். சிலர் சௌக்யமாகவும் சிலர் கஷ்டப்பட்டுக் கொண்டும் இருக்கா.

இதை எல்லாம் பாத்துண்டிருக்கேன். அவர்கள் குறைகளையும் கேட்டுண்டிருக்கேன்.

அவர் நான் பல மதத்தலைவர்களையும், வித்வான்களையும் சந்தித்திருக்கேன். கேள்விகள் கேட்டிருக்கிறேன். அவர்கள் தந்த பதில்கள் கர்வத்தின் அடிப்படையில்தான் இருந்தன. ஆனால் உங்கள் பதிலில் எளிமையும், உண்மையும், ப்ரதிபலிக்கின்றன. நீங்கள்தான் உண்மையான துறவி, தூய்மையானவர். ஒளி வீசும் கண்களுடன் தேஜோமயமாக இருக்கின்றீர். எல்லாம் தெரிந்திருந்தும் ஒன்றும் தெரியாது என்று சொல்வதிலிருந்து ஒரு மஹான் என்பது நன்கு விளங்குகிறது. உங்களை தர்சித்தது என் பாக்யம் என்றார்.



- திடீரென்று ஞானியாகி விட முடியாது. ஒரே ஜென்மாவிலே ஞானியாக முடியாது. பல்வேறு ஜென்மாக்களிலே நல்ல பணிகளை செய்து, செய்து, செய்து, செய்து, மனது பக்குவப்பட்டு, பலப்பட்டு, ஒன்றாக, நல்ல விஷயத்திலேயே நின்று, நிலை பெற்று, பிறகு ஞானியாக, நாம் உயர வேண்டும்.
- வேதம் - ங்கறது நமக்கு ஹிதத்த சொல்றது मातृपितृसहस्रेभ्यो हितैषिणा वेदेन उपबन्धितं अर्थम् அப்டீங்கறதா ஆசார்யாள் சொல்றா. ஆயிரம் தாய் தகப்பனார்களை விட, இந்த வேதம்-ங்கறது அத்தன ஹிதைஷி.
- ஆசார்யாள் அவதாரமில்லைன்னா, இந்த கர்ம மார்க்கமே நமக்கு தெரிஞ்சிருக்குமான்னு ஸந்தேஹந்தான்.



V.KRISHNAMOORTHY
Managing Trustee



P AKASHRAM
Executive Trustee

# ஸ்ரீ மாதா டிரஸ்ட்

**2000-ஆம் ஆண்டு முதல் ஏழை புற்றுநோயாளிகளின் துயர் தீர்க்கும் "இலவச காப்பகம்"**

**ஸ்ரீ ஜயேந்திர பெரியவா நினைவு முதியோர் இல்லம் மாமண்டூர் கிராமம்**





உங்கிட்ட இருக்கற பணத்துக்கு நீ, டிரஸ்டி... அவ்வளவுதான். சொந்தக்காரன்னு நினைச்சுக்காதே...

ஸ்ரீ மஹா பெரியவா ஒரு ஸ்பெஷலிஸ்ட் – எல்லா நோய்களுக்கும் நோய் நாடி, நோய் முதல் நாடி, நோயாளிகளின் உள்ளமும் நாடி அதற்கேற்ற மருந்து கொடுப்பார்கள். (இது ஒரு கஞ்ச மகாபிரபுவுக்கு கருணை காட்டிய சம்பவம்) சொன்னவர் – ஓர் அணுக்கத் தொண்டர் – ஸ்ரீ மடம்.

பிரபு என்று எவரையாவது சொல்ல வேண்டுமானால் இவரைத்தான் சொல்லவேண்டும். கஞ்ச மகாபிரபு ! காசுக்குப் பஞ்ச மில்லை. செலவழிக்க–அனுப விக்க மனம் இல்லை. பெரியவா தரிசனத்துக்கு வந்தார். வலது கையால் வாயை மறைத்துக் கொண்டு உருக்கமாகச் சொல்ல ஆரம்பித்தார்.

"எனக்கு இரத்த அழுத்தம், டயாபடீஸ் இரண்டும் ரொம்ப நாளா இருக்கு; இப்ப கேன்சர் வேற வந்திருக்கு. ரொம்ப கஷ்டப்படறேன். பெரியவா பரிஹாரம் சொல்லணும்..."

"நான் சொன்னால் சொன்னபடி செய்வாயா?"

"செய்யறேன்"

"ரொம்ப கஷ்டமா இருக்குமே..."

"இருக்கட்டும், வியாதி நீங்கினால் போதும்... பெரியவா என்ன உத்தரவு போட்டாலும் அதன்படி நடக்கிறேன்" வியாதியெல்லாம் என்னை விட்டுப் போனால் போதும்..." என்று கண்ணீரைத் துடைத்துக்கொண்டார்

பொதுவாகவே, அவ்யாஜ கருணை (காரண மில்லாத கருணை) பெரியவாளுக்கு. இவரோ கண்ணீர்விட்டு சரணாகதி பண்ணுகிறார். கை விட முடியுமா? பெரியவா சொன்னார்கள்...

"கிணற்றில் தண்ணீர் இருக்கு. தண்ணீர் என்னுடையதுதானே என்று சொந்தம் கொண்டாடி, கிணறே தண்ணீரைக் குடித்து விடுவதில்லை...."

"மரத்தில் பழம் பழுக்கிறது. என் மரத்துப் பழம்; நான்தான் சாப்பிடுவேன் என்று மரம் பழங்களைச் சாப்பிடுவதில்லை..."

"பசு மாடு பால் கொடுக்கிறது; பசுமாடு பால் குடிப்பதில்லை..."

"எத்தனையோ செடி–கொடிகள், காய் காய்க் கின்றன. ஒரு காயைக்கூட அவை தமக்கு வைத்துக் கொள்வதில்லை"

"இப்படி ஓரறிவு–ஈரறிவு படைத்த பிராணி களேகூட பரோபகாரம் செய்கின்றன. மனித னுக்கு ஆறறிவு என்கிறார்கள். அவன் மற்றவர் களுக்கு எவ்வளவு உபகாரம் செய்யணும்?"

"உன்னிடம் பணம் இருக்கு... நீயும் சரியா அனுபவிக்கலே, பரோபகாரம்–தர்மம் செய் யலே... போன ஜன்மத்து பாவங்கள் ஒன்று சேர்ந்து வியாதியாக வந்து உன்னைப் படுத்துகிறது... பாவம் போகணுமானால் தான–தர்மம் செய்யணும்..."

"இஷ்டா–பூர்த்தம்னு தர்ம கார்யம் தெரியுமோ? குளம் வெட்டுவது, கோயில் திருப்பணி, ஏழை களுக்கு உதவி, சொந்தக்காரர்களுக்கு உதவி – இப்படி, நல்ல கார்யங்களிலே பணத்தைச் செலவிடணும். அப்புறம்... வியாதிகளால் கஷ்டப்படுகிற அனாதைகளுக்கு மருந்து வாங் கிக்கொடு. அம்மா... அம்மான்னு ஒருத்தன் கை நீட்டினால், அவன் வெறுங்கையோட போகப்படாது என்ன? உங்கிட்ட இருக்கிற பணத்துக்கு நீ டிரஸ்டி, அவ்வளவுதான். சொந்தக்காரன்னு நினைச்சுக்காதே..."

"கஞ்ச" மகாபிரபு குலுங்கிக் குலுங்கி அழுதார். பின்னர் "கர்ண" மகாபிரபுவாக நெடுங்காலம் ஜீவித்திருந்தார்.

Courtesy: Whatsapp Message

புற்றுநோய் என்னும் கொடிய அரக்கனிடமிருந்து ஏழை புற்று நோயாளிகளை காக்கும் புனித சேவையை ஸ்ரீ மாதா டிரஸ்ட் 21–ஆவது ஆண்டாக நன்கொடையாளர்களின் நிதியுதவியைக் கொண்டு சற்றும் தொய்வில்லாமல் செயல்படுத்தி வருகிறது. அடையாறு கேன்சர் மருத்துவமனைக்கு வரும் வெளியூர் ஏழை புற்றுநோயாளிகளுக்கு ஸ்ரீ மாதா டிரஸ்ட் நிர்வகிக்கும் நம்ம தர்மசாலாவில் பாதுகாப்பான, சுகாதாரமான தங்குமிடம்; மூன்று வேளை சத்தான, சுவையான, சைவ உணவு ஆகியவை நோயாளிகளின் சிகிச்சை காலம் முழுவதும் முற்றிலும் இலவசமாக வழங்கப்பட்டு வருகிறது.

நமது இச்சேவையின் மூலம் ஏழை புற்றுநோயாளிகள் முறையான சிகிச்சையை தடையின்றி பெற்றக்கொள்வதால் புற்றுநோய் முற்றுவதிலிருந்து பாதுகாக்கப்பட்டு விரைவில் நலம் பெறுகிறார்கள். ஏழை புற்று நோயாளிகளுக்கு உணவு வழங்க உதவி செய்யுங்கள் உண்மையான இன்பம் இதுவென்று உணருங்கள்.



நம்ம தர்மசாலாவில் நிம்மதியுடன் பசியாறும் ஏழை புற்றுநோயாளிகள்

ஸ்ரீ ஜயேந்த்ர பெரியவா அவர்களின் திருப்பெயரில் செயல்படவிருக்கும் **ஸ்ரீ ஜயேந்த்ர பெரியவா நினைவு முதியோர் இல்லம்** சென்னைக்கு அருகில் மாமண்டூர் கிராமத்தில் அமைய உள்ளது. முற்றிலும் இலவசமாக செயல்படவிருக்கும் இம்முதியோர் இல்லம் – வயதானவர்கள் எவ்வித சிரமமுமின்றி தங்குவதற்கு ஏற்றாற்போல் இயற்கையான காற்றோட்டமான சூழ்நிலையில், மருத்துவ முதலுதவி வசதி மற்றும் இலவச ஆம்புலன்ஸ் சேவை ஆகியவற்றுடன் அமைய உள்ளது. **இத்தனை வசதிகளுடன் முற்றிலும் இலவசமாக ஆதரவற்ற, ஏழை முதியோர்களுக்கென ப்ரத்யேகமாக, சுமார் மூன்று கோடி ரூபாய் செலவில் அமையவிருக்கும் நமது ஸ்ரீ ஜயேந்த்ர பெரியவா நினைவு முதியோர் இல்லத்திற்கு 2021-ம் ஆண்டு தை மாதம் பூமி பூஜை நடத்தப்பட்டு, 2022-ம் ஆண்டு தை மாதம் செயல்பாட்டுக்கு கொண்டு வர ஸ்ரீ மாதா டிரஸ்ட் தீர்மானித்துள்ளது. இம்மாபெரும் சேவை சாம்ராஜ்யத் திற்கு உங்களது நல்லாசிகளையும், தாராள நன்கொடையையும் வேண்டுகிறோம்.**

தங்களது சொத்துகளுக்கு வாரிசு இல்லையே என்று ஏங்குவோர் ஸ்ரீ ஜயேந்த்ர பெரியவா நினைவு முதியோர் இல்லத்திற்கு உதவுவதன் மூலம் தங்கள் மன வேதனையை நிரந்தரமாய் நிவர்த்தி செய்து கொள்ள முடியும்; மேலும்,ஊசி முனையளவும் உங்கள் மீது அன்பு காட்டி உதவி செய்யாத உறவினர்களுக்கும் அவர்களது சந்ததியினருக்கும் உங்கள்சொத்து மொத்தமாக சென்று சேர்வதைக் காட்டிலும் இந்த நற்செயல் உயர்ந்த புண்ணியம் அல்லவா? சிந்திப்பீர்... இன்றே செயலாற்றுவீர்...

**தங்களது நன்கொடையை இவ்வாறு வழங்கலாம்:**

- ரூ.1,00,000/- நிதியளித்து நிரந்தர காப்பாளர் ஆகலாம்
- ரூ.75,000/- நிதியளித்து வள்ளல் ஆகலாம்
- ரூ.25,000/- நிதியளித்து "நம்ம தர்மசாலா"வின் ஒரு நாள் செலவினை ஏற்கலாம்
- ரூ.10,000/- நிதியளித்து ஒரு நாள் உணவு செலவினை ஏற்கலாம்
- ரூ.5,000/- நிதியளித்து மதிய / இரவு உணவு செலவினை ஏற்கலாம்
- ரூ.3,000/- நிதியளித்து காலை உணவு செலவினை ஏற்கலாம்

Kindly send your contribution by CHEQUE / NEFT / CASH / M.O.

- Account Name: SRI MATHA TRUST
- Bank Name: INDIAN OVERSEAS BANK, Gandhi Nagar, Chennai-20.
- Current A/c No.: 163502000001090
- IFSC Code: IOBA0001635

Donations to our Trust is exempted U/S. 80(G) of the Income Tax Act.

இம்முதியோர் இல்லத்தின் கட்டிட நிதியாக ரூ.5,00,000/- வழங்குவோர் விரும்பும் பெயரில் தங்கும் அறை ஒன்று அமைக்கப்படும். மேலும் தாங்கள் விரும்பும் தொகையையும் நன்கொடையாக வழங்கலாம். உங்களது பெயர் அம்முதியோர் இல்லத்தில் தகுந்த முறையில் பதிவு செய்யப்படும்.

ADMIN OFFICE: 95/6, Rams Apartment, 2nd Main Road, Gandhi Nagar, Adyar, [next to Harini Skin & Laser Clinic] Chennai - 600 020.
NAMMA DHARMASALA: 9, Yogi Garden, Sriram Nagar Main Road, Adjacent to IIT Compound, Near New Cancer Institute, Chennai-113. Tel: 044-4509 8647
Tel:044 - 24420727, 42661687 | Mobile:9500001065 / 9003247857 | vkrishnamoorthy.smt@gmail.com | www.srimathatrust.org

# பகவத் கீதையின் அமைப்பு

ப்ரதீபப் பேழை

போர் களத்தில் எதிரிகளின் படைகளின் முன்வரிசையில் ஆசாரியர்களையும், பாட்டன்மாரையும் மற்ற உறவினர்களையும் கண்டு கலங்கி விடுகிறான். யுத்தமே வேண்டேன் என்று கூறி ஓட இருக்கும் தனஞ்சயனை மீட்டுக் கடமைவழியே கொணர்ந்து நிறுத்துபவர் கீதாசாரியன். அவருடைய அந்த உபதேசமே பகவத் கீதை எனப் போற்றப்படும் விழுமிய யோகசாத்திர நூலாகும். கிருஷ்ணோபரிக்ஷதம் என்றும் அழைக்கப்படுகிறது.

மகாபாரதத்தில் மேலும் பர்வத்தில் பகவத்கீதை வருகிறது. கீதையிலுள்ள ச்லோகங்களின் மொத்த எண்ணிக்கை எழுநூறு ஆகும். அந்த எழுநூறு ச்லோகங்களும் சிறியவையும், பெரியவையுமான பதினெட்டு அத்தியாயங்களாக வகுக்கப்பட்டுள்ளன.

இந்த எழுநூறு ச்லோகங்களில், கண்ணபிரான், பேசுபவை தாம் மிகவும் அதிகம். அடுத்தபடியாக அர்ஜுனன் கூறுபவை : சஞ்சயன் வாக்காக வருபவை இன்னும் குறைவு. கீதை நூலைத் துவக்கி வைக்கிறாப் போல், முதல் ச்லோகம் ஒன்று மட்டுமே திருதாஷ்டிரன் கூறுவதாக உள்ளது. ஏழுநூறு ச்லோகங்களுக்கும் கணக்கு இதோ உள்ளது:

| | |
|---|---|
| கண்ணபிரான் பகர்வது | 571 |
| பார்த்தன் கூறுவது | 87 |
| சஞ்சயன் சொல்வது | 41 |
| திருதாஷ்டிரன் வாக்கு | 1 |
| | 100 |

கீதை முழுவதுமே உரையாடலாக அமைந்த ஒரு படைப்பு ஆகும். பாரதம் இயற்றிய வியாச முனிவர் எங்குமே தாமாக வாயைத் திறக்கவில்லை. கண்ணனும், பார்த்தனும் சஞ்சயனுமாகப் பேசிப் பேசியே பகவத்கீதை வடிவம் பெறுகிறது. பதினெட்டு அத்தியாயங்களில் 7,9,13,15,16 ஆகியவற்றில் கண்ணபிரான் மட்டுமே முழுக்கக் முழுக்கப் பேசுகிறார். பார்த்தனின் குறுக்கீடுகளை அவற்றில் காண முடியாது. பகவான் பகர்வண அந்த ஐந்து அத்தியாயங்களும், பகவான் வாய் திறவாதது முதல் அத்தியாயமாகும். இனி, ஒவ்வொர் அத்தியாயமாக ஓர் ஓட்டத்தில் கீதையின் அமைப்பைக் காண்போம்.

(தொடரும்)

# இறைவனை நம்புவதற்கு ஏழு காரணங்கள்

குளவிகளில் ஒருவகை பூமியில் துளையிடுகிறது. பிறகு அக்குளவி ஒரு வெட்டுக் கிளியை வீழ்த்தி வெல்கிறது. வெட்டுக் கிளியைக் கொல்லாமலே அதன் வபையான இடத்தில் கொட்டி அதனைப் பிரக்ஞை இழக்கச் செய்கிறது. அதைத் தன் துளைக்குள் கொண்டு வந்து போட்டுக் கொள்கிறது குளவி. குளவிகளின் குஞ்சுகளுக்கு இறந்த பிராணிகளின் மாமிசம் உதவாது. அப்படிப்பட்ட ஊனைத் தின்றால் இளங் குளவிகள் இறந்துவிடும். இதனால் தான் வெட்டுக் கிளியை உயிரிழக்காமல் உணர்வை மட்டும் இழக்குமாறு செய்கிறது குளவி. தாய்க் குளவி, வெளியே பறந்து போய் இறந்தே விடுகிறது. குஞ்சுகளைக் கூட்டில் விட்டு அவை பெரிதாகும்வரை சவமாகாத வெட்டுக்கிளியின் ஊன் அவற்றுக்கு நியதிப்படி கிடைக்கிறது. ஆதிகாலத்திலிருந்து இன்றுவரை ஒவ்வொரு குளவியும் இப்படிச் செய்து வருகிறது. ஆதியில் முதன் முதலில் ஒரு குளவி இப்படிச் செய்து தான் இருக்க வேண்டும். இல்லாவிடில் இன்று குளவி இனமே இருக்காது. சரி, அந்த ஆதிக் குளவியிடம், முட்டையிடும் முன்பே இவ்வாறு ஒரு வெட்டுக்கிளியை இடமறிந்து கொட்டி, வளைக்குள் கொண்டு வைத்துக்கொண்டு, தன் மரணத்துக்குப் பின்னும் தம் குழந்தைகளின் உயிருள்ள' உணவுக்கு வழி செய்து தருமாறு கற்பித்தது யார்? சூழ்நிலை மாறி வரும்போது, மாற்றம் ஏற்பட்ட பின்னர் அதற்கு ஏற்ப பிராணிகள், தங்கள் பௌதிக-மானசீக அமைப்புக்களை 'இயற்கை' நியதியில் மாற்றிக் கொள்வதாக டார்வின் சொல்வது, இதுபோன்ற அதிசயங்களை விளக்க வொண்ணாது. ஏனெனில் இங்கு தன் இனம் பிறக்கு முன்னரே அதற்கான நீண்ட காலத்தேவைகள் பூர்த்தி செய்யப்படுகின்றன. இத்தகைய உள்ளுணர்வு இயற்கை பரிணாமத்தினுள் வராது: இது பகவத் பிரசாதமேயாகும்.

**நான்கு:** மற்றப் பிராணிகளின் உள்ளுணர்வுக்கும் அதிகமாக மனிதனிடம் ஒன்று உள்ளது - அதுவே பகுத்தறியும் ஆற்றல். ஒன்று, இரண்டு, மூன்று என்று எண்ணிக் கொண்டு போவதென்றால் என்னவென்றே மற்றப் பிராணிகளுக்குத் தெரியாது. எண்ணிக்கை' என்றால் என்ன என்றே அவற்றுக்குத் தெரியாது. உள்ளுணர்ச்சி மூலமே அவை செயலாற்றுகின்றன. ஒரு தனியான சுத்தஸ்வரத்தைக் குழலில் கேட்கும்போது ஏற்படும் இன்பம் போன்றது பிராணிகளுக்கு உள்ள ஒரே ஆற்றலான உள்ளுணர்வு. அது அழகானது தான். ஆனால் அதன் எல்லை மிகவும் குறுகலாக

வரையறுக்கப்பட்டிருக்கிறது. தனியொரு ஸ்வரத்தில் மேலும் போக முடியாது, கீழும் போக முடியாது. மனித மூளை எப்படிப்பட்டது தெரியுமா? சகல ஸ்வரங்களும் சேர்ந்த சங்கீதம் போன்றது. பாடகர் மட்டுமின்றி, அத்துணை இசைக் கருவிகளும் உடன் சேர்ந்து எல்லா ஸ்வரங்களிலும் புகுந்து விளையாடுவது போன்றது மனித மூளையின் ஆற்றல். இது இயற்கைப் பரிணாமம் அன்று, அகஸ்மாத்தாக நேர்ந்தது அன்று என விவரிக்க வேண்டிய அவசியமே இல்லை. மனித மூளையின் எல்லையற்ற ஆற்றலே அதற்கு ஆதாரமான ஒரு மகா மதியைச் கூட்டுகிறது. இதைப் பற்றி விளக்கிச் சிரமப்பட அவசியமே இல்லை. மனிதனுக்குள்ள உண்மையான பகுத்தறிவைக் கொண்டு நாம் பெறக்கூடிய தலை சிறந்த பயன் யாது எனில், 'நான் இப்படி அறிவு படைத்திருப்பதற்குக் காரணம் பிரபஞ்சப் பேரறிவின் ஒரு பொறியைப் பெற்றிருப்பதே' என்று அறிந்து, அதைத் தியானிப்பது தான்.

***ஐந்து:*** பாரம்பரிய இயல்புகள் உள்படப் பல ஆற்றல்களைக் கொடுப்பவை 'ஜீன்'கள். இவற்றைப் பற்றிய மர்மங்களை டார்வின் அறிந்திருக்கவில்லை. அதனால் தான் அவர் சந்தர்ப்பச் சூழ்நிலையைப் பொறுத்து இயற்கை நியதியே படிப்படியாக உயிரினங்களைப் பரிணமிக்க வைத்தது என்றார்.

இந்த ஜீன்கள் சொல்லவும் முடியாத வண்ணம் நுண்ணியவை. உலகில் உள்ள அத்துணை மாந்தர்களிடமும் வாழ்வுக்கு அடிப்படையாக இருக்கும் எல்லா ஜீன்களையும் ஓரிடத்தில் சேர்த்தாலும் ஒரு சிறிய சிமிழுக்குள் அடைத்துவிடலாம். ஆயினும் கோடான கோடி மாந்தரின் உயிரணுக்களுள் மேவி, அவர்களது மானுட இயல்புகளுக்கும் ஆற்றல்களும் திறவுகோலாக இருப்பன இந்த ஜீவன்கள். இப்படிப்பட்ட அதி சூட்சுமமான ஜீன்' தனக்குள் வழிவழியான பல பரம்பரையினரின் குணங்களையும் சித்தப் பண்பு முழுவதையும் அடக்கி வைத்துக் வைத்துக் கொண்டிருப்பது எங்ஙனம்? ஜீன்களைத் தரித்து, கருவுக்கு எடுத்துச் செல்பவை உயிரணுக்கள். இந்த உயிரணுக்களை நாம் பிரஸ்தாபித்த பின் தான் டார்வினுடைய பரிணாமவாதம் பற்றிய பேச்சே வருகிறது. உயிரணுக்கள் சந்தர்ப்பத்துக்கு ஏற்ப எப்படிப் பரிணமிக்கின்றன என்று அவர் விவரித்தார். ஆனால் அதற்கு முன்பாக, உலகில் உயிர் வாழும் அனைத்தையும் ஆண்டு ஒழுங்கு செய்கின்ற ஜீன் இருக்கின்றதே, அது பரிணாமத்தில் எப்படி வர முடியும்? சூஷ்ம தரிசனக் கருவிகளுக்கும் கூட அகப்படாத இந்த ஜீன்களிடம் உலக வாழ்வின் ஆளுகையைக் கொடுத்திருப்பது, படைப்பாற்றலும் அறிவாற்றலும் பொருந்திய கடவுள் என்ற ஒன்றாலேயே முடியக் கூடியது. வேறு எந்த அடிப்படையிலும் இந்தப் புதிரை அவிழ்க்க முடியாது,

*மிக மிக நுண்ணிய ஜீன்களின் மிக மிக மகத்தான ஆற்றலைப் பார்க்கும்போது அந்த மகாமதியின் அந்த மாபெரும் சிருஷ்டி கர்த்தனின் சாதுரிய லீலையைக் காண்கிறோம். அவன் ஒவ்வோர் உயிருக்கும் உண்டான தேவைகளை எப்படிக் கவனத்துடன் பூர்த்தி செய்கிறான் என்பதைக் காண்கிறோம்.*

***ஆறாவது:*** *இயற்கையில் அநாவசியம் என்பதே இல்லை. அத்தியாவசியமானவற்றை மட்டுமே பரம சிக்கனமாக உபயோகித்துப் பஞ்ச வாழ்வு நடைபெறுகிறது. இப்படி ஆழ்ந்த கருத்துடன் முன்கூட்டியே யோசித்துப் பொருட்களை, ஆற்றல்களைப் படைத்து, உபயோகித்து உபயோகித்து உலக வாழ்வினை நடத்துவதில் ஓர் ஆனந்த ஞானப் பொருளின் பெருமையையே உணர்கிறோம்.*

*பல்லாண்டுகளுக்கு முன்பு ஆஸ்திரேலியாவில் ஒருவகைச் சப்பாத்திக் கள்ளியைக் காப்பு வேலியாக அமைத்தார்கள். அப்போது ஆஸ்திரேலியாவில் இந்தக் கள்ளியை அரித்துத் தின்னக் கூடிய பூச்சி பொட்டு ஏதும் இல்லை. எனவே அபரிமிதமாகப் பெருகத் தொடங்கியது. யாரும் வெட்டி அகற்ற முடியாதபடி பயங்கர முட்களுடன் இந்தக் கள்ளியானது பட்டிக்காடு, பட்டணம் யாவற்றிலும் பெருகி, மக்களையே விரட்டியடித்தது. வயல்களெல்லாம் பாழாயின. இங்கிலாந்தின் நீள அகலங்கள் கொண்ட ஒரு பெரும் பகுதி முழுதும், அப்படியே கள்ளிக் காடாகி விட்டது. இந்தப் பயங்கரப் போக்கைக் கண்டு கிருமி இயல் நிபுணர்கள் உலகெல்லாம் சல்லடை போட்டனர் கடைசியில் அவர்கள் ஒரு பூச்சியைக் கண்டுபிடித்தே விட்டனர். இந்தப் பூச்சி மேற்படி கள்ளித் தினுசை மட்டுமே புசிப்பது. வேறெதையும் கண்ணெடுத்தும் பாராது. கள்ளியை மட்டும் கபளீகரம் செய்யும். இவ்வாறு ஆஸ்திரேலியக் கள்ளிக்கு எதிராக முன்கூட்டியே ஒரு பூச்சி படைக்கப்பட்டதே விந்தை. அதனினும் விந்தை இந்தப் பூச்சியை அழிக்கக் கூடிய உயிரினம் ஏதும் ஆஸ்திரேலியாவில் இல்லை. எனவே இப் பூச்சியை ஆஸ்திரேலியாவில் கொண்டு விட்டதில் கள்ளிக் காடு மறைந்தே அதோடு விந்தை முடியவில்லை. கள்ளிக் காடு அழிந்ததும் இந்தப் பூச்சிகள் - விருத்தியாவதும் எப்படியோ எப்படியோ ஒரேயடியாகக் கட்டுப்படுத்தப்பெற்றது. எப்போதேனும் கள்ளி உபத்திரவம் ஏற்பட்டால் அதைச் சமாளிப்பதற்குரிய ரிஸர்வ் போலீஸ்' அளவுக்குத்தான் இன்று இப்பூச்சி ஆஸ்திரேலியாவில் உள்ளது.*

*இவ்வாறு கட்டுப்பாடுகள் செய்து, பிரபஞ்சம் எங்கணும் பலவித உயிரினங்களின் வாழ்க்கையைக் கோவை செய்து சம நிலையில் வைத்திருக்கும் அதிசயத்தை கடவுள் என்ற ஒன்றையன்றி எப்படி விளக்க முடியும்?*

உலகில் மனிதளவுக்குப் பெரியப் பூச்சிகள் பறந்து கொண்டும், நகர்ந்து கொண்டும் இருந்தால் எப்படி இருக்கும்? இந்தப் பூச்சிகள் இனப்பெருக்கம் செய்வதோ வெகு வேகத்தில். எனவே பெரும் பூச்சிப் பட்டாளம் மனித இனத்தையே அழித்திருப்பது சாத்தியம் தான். ஏன் இப்படி நிகழவில்லை?

பூச்சி இனத்துக்கு மனிதனைப் போன்ற நுரையீரல் இல்லை. இல்லை. . அவை - குழாய்களின் மூலமே சுவாசிக்கின்றன. ஆனால அவை ஓரளவு வளர்ந்த பின் இந்தக் குழாய்கள் வளர்வதில்லை. எனவே இப்பூச்சிகளால் இதன் பின் வளர முடிவதில்லை. இப்படி அந்தக் குழாய்கள் வளராமல் கட்டுப்படுத்துவது யார் ?

அந்த ரட்சண சக்தி இல்லாவிடில் இன்று சிங்கத்தின் அளவுக்கு வண்டுகள் பறந்து கொண்டிருக்கும். கற்பனை செய்து பார்த் தாலே குலை நடுங்குகிறது அல்லவா?

**ஏழாவது:** கடவுள் என்று ஒருவர் இருக்கிறார் என்பதற்கு இணையற்ற சான்று என்னவெனில், மனிதன் கடவுள் கொள்கையை வகுத்துக் கொண்டிருப்பதேயாகும்.

உலகில் வேறு எந்த உயிரினத்துக்கும் இல்லாத சிந்தனா சக்தியின் மூலமே மனிதன் கடவுள் என்ற ஒன்றைக் கொள்ள முடிகிறது. இந்தச் சிந்தனா சக்திதான் மனிதனுக்குள் உள்ள ஈசுவராம்சமான ஆற்றல். கண்ணில் தெரியாத பல மர்மங்களைக் கூட மனிதனால் கண்டுகொள்ள முடிவது இந்தச் சிந்தனா சக்தியால்தான். இது விரித்துக் காட்டும் காட்சி அகண்டமானது. அதற்கு எல்லையே இல்லை. 'சிந்தனா சக்தி' எனப்படுவதைத் தூய்மை செய்து பூரணமாக்கினால் அதுவே ஆன்மீக சத்தியத்தின் சக்தியாகும், அந்த உயர் நிலை பெற்ற ஒருவன் காண்பன, கேட்பன அனைத்திலும் ஈசுவரனின் திட்டத்துக்கும், அவன் வகுத்த லட்சியத்துக்கும் சாட்சியங்களைப் பார்ப்பான். கடவுளின் மோக்ஷ லோகம் எங்கெங்கும் இருப்பது; எல்லாவற்றிலும் இருப்பது; அந்த மோக்ஷ லோகம் தனக்கு மிக நெருக்கமாக இருக்குமிடம் தனது இதயமே ' என்ற மகத்தான - உண்மையை அநுபவிப்பான். கடவுள் எங்கும் இருக்கிறான், எல்லாவற்றிலும் இருக்கிறான், எல்லாவற்றையும் விட மிக மிக நெருக்கமாகத் தன் இதயத்திலேயே இருக்கிறான் என உணர்வான்.

கிறிஸ்துவத் துதி கூறும் வாசகங்கள் இதய மொழியில் உண்மை என்பது மட்டுமல்ல, விஞ்ஞான வழியிலும் அதுவே உண்மை.

ஆகாயமனைத்தும் ஆண்டவன் மகிமையை ஆர்ப்பனவே
விண்மீன் பதித்த விசுவவெளி - அவன் வியத்தகு கைவண்ணமே

தமிழாக்கம்: ரா. கணபதி

# தை மாதம்
# ஸ்ரீ மடத்தில் - விசேஷ தினங்கள்

| தேதி | கிழமை | விபரம் |
|---|---|---|
| *14/01/2021* | வியாழன் | உத்தராயண புண்ய காலம் - பொங்கல் பண்டிகை |
| *15/01/2021* | வெள்ளி | அவிட்டம் தேர் |
| *24/01/2021* | ஞாயிறு | ஏகாதசி |
| *25/01/2021* | திங்கள் | த்வாதசி |
| *26/01/2021* | செவ்வாய் | ப்ரதோஷ பூஜை |
| *28/01/2021* | வியாழன் | தை பூசம் |
| *05/02/2021* | வெள்ளி | அனுஷம் தேர் |
| *06/02/2021* | சனி | அனுஷம் பாராயணம் |
| *07/02/2021* | ஞாயிறு | ஏகாதசி |
| *07/02/2021* | ஞாயிறு | மூலம் தேர் |
| *08/02/2021* | திங்கள் | த்வாதசி |
| *09/02/2021* | செவ்வாய் | ப்ரதோஷ பூஜை |
| *09/02/2021* | செவ்வாய் | உத்ராடம் தேர் |
| *10/02/2021* | புதன் | உத்ராடம் பாராயணம் |
| *11/02/2021* | வியாழன் | அவிட்டம் தேர் |
| *12/02/2021* | வெள்ளி | அவிட்டம் பாராயணம் |
| *12/02/2021* | வெள்ளி | விஷ்ணுபதி புண்ய காலம் |
| *22/01/2021, 29/01/2021, 05/02/2021 - 12/02/2021* வெள்ளிக்கிழமை பூஜை | | |

# புராணக் கதை

காஞ்சி வாதூலன்

## காதல் படுத்தும் பாடு

இது என்ன வித்யாஸமாக உள்ளதே என்று சிஷ்யன் கேட்க ''ஆம் ஆராயாமல் செய்யப்படும் எதுவும் பாடாய் படுத்தும். அரசன், ஆண்டி, பாமரன், பண்டிதன் என்று பேதமில்லை. சான்றாக புருரவஸின் கதையைச் சொல்கிறேன் கேள் '' என்றார்.

புதனுக்கும், இளா தேவிக்கும் பிறந்தவன் புரூரவஸ் என்னும் அரசன். ப்ரதிஷ்ஸ்தானம் என்னும் தலை நகரை மையமாகக் கொண்டு அரசாக்ஷி செய்து வந்தான். தர்மமான முறையில் அரசாண்டு வந்தான். நூறு அஸ்வமேதங்களைச் செய்ததனால் அவன் புகழ் விண்ணிலும், மண்ணிலும் பரவியது.

ஒரு முறை தேவலோகத்தில் அவனது புகழை நாரதமுனிவர் பாட அங்கிருந்த அப்ஸரஸான ஊர்வசி அவன் மீது காதல் கொண்டாள். ஏற்கனவே அகத்தியரால் பூலோகம் போக சாபம் பெற்றவளாகையால் இப்போது அவனைக் காண பூலோகம் போக விரும்பினாள்.

துரத்ருஷ்டமாக அவள் பூலோகம் வரும் போது கேசி எனும் அரக்கன் கடத்திச் சென்றான். அவளுடைய அபயக் குரலைக் கேட்ட புரூரவஸ் அரக்கனை மாய்த்து அவளைக் காப்பாற்றினான். விண்ணுலகின் அந்த சௌந்தர்யத்தைப் பார்த்த அரசன் அந்த நிமிடமே அவளுக்கு அடிமையானான். பார்க்குமிடமெல்லாம் நீயே அல்லவா, என்னை விட்டுப் போகாதே என்று வேண்ட அவள் மூன்று நிபந்தனைகளை விதித்தாள்.

1. என்னுடன் இரு, ஆடுகள் வந்துள்ளன. அவைகளுக்கு எந்த ஊறும் வரக்கூடாது.

2. என்னுடைய ஆகாரம் நெய் மட்டுமே. தடுக்கக் கூடாது.

3. சயன அறையைத் தவிர்த்து ராஜா நிர்வாணமாயிருப்பதை அவள் பார்க்க நேரக் கூடாது.

போதையில் மயங்கி மதியிழந்த அரசன் எல்லா நிபந்தனைகளையும் ஒத்து கொண்டான். வந்தது வினை. பல வருடங்கள் அவர்கள் இருவரும் மகிழ்ந்திருந்தனர். ஸ்வர்கத்தில் அவளது இல்லாமை இந்த்ரனை வருத்தியது. அவனுடைய செல்லமாகிய அவள் ஏன்

இல்லை என்று கேட்டு விஸ்வாவஸு என்னும் கந்தர்வனை அழைத்து அவளை மீண்டும் அங்கே அழைத்துவரப் பணித்தான்.

விஸ்வாவசுவும் சில கந்தர்வர்களும் திட்டம் போட்டு அவனுடைய அரண்மனைக்குச் சென்றனர். அரசனும், ஊர்வசியும் உறங்கிக் கொண்டிருக்கும்போது இரண்டு ஆடுகளையும் திருடிச் சென்றனர். அப்போது அவைகள் கத்த ஊர்வசி அரசனை போய் பார்க்குமாறு பணிக்க அவனும் வெளியே ஓடினான். அதே சமயத்தில் விஸ்வாவசு தன் சக்தியால் மின்னல் ஒளியை சயன அறையில் பாய்ச்சினான்.

ஊர்வசியின் இறுதி நிபந்தனை முறிந்தது.

உடனே அவள் எதுவும் பேசாமல் விண்ணுலகம் ஏகினாள். கந்தர்வர்கள், ஆடுகளை அவிழ்த்து விட அவைகளுடன் அரசன் அரண்மனை போனான். ஊர்வசி இல்லாதது கண்டு பித்து பிடித்ததுபோல் ஆனான். எங்கேயாவது இருப்பாள் என்னும் ஆவலில் மரமே, செடியே, கொடியே என் ஊர்வசியைக் கண்டீரா ? என்று ஊர் சுற்றினான். பல நாட்கள் கழித்து குருக்ஷேத்ரத்தில் அவளைக் கண்டு தன்னுடன் வர பணிக்க அவள் மண்ணில் தன் வாசம் நிறைந்தது.

அரசர்கள் எப்போதும் பெண்களையும், திருடர்களையும் நம்பக்கூடாது''என்று கூறி மறைந்தாள். அவனிடம் இரக்கம் கொண்ட அவள் ஸ்வர்கத்தில் இணைவோம் என்றாள். தன் மூத்த பிள்ளை ஆயுவிடம் அரசாக்ஷியை ஒப்படைத்துவிட்டு புரூரவஸ் தான் செய்த புண்யத்தால் ஸ்வர்கம் போய் ஊர்வசியுடன் இணைந்தான். காதல் படுத்தும்பாடு இதுதான் என்றார் பௌராணிகர்.

(விக்ரம ஊர்வசீயம் என்னும் நாடகத்தில் கவி காளிதாஸர் இக்காதலை மிகச்சிறப்பாக வடித்திருப்பார்).

---

## ஸனாதன தர்மப்புதிர்கள் டிஸம்பர் விடைகள்

1. தயிர் சாதம்
2. ஹம்பி விரூபாக்ஷர்கோயில்
3. தண்டியடிகள்
4. காஞ்சீபுரம்
5. காஞ்சீபுரம்
6. பஃஃளுறி ஆறு
7. உலகளந்த பெருமாள் காஞ்சீபுரம்
8. புவனி விடங்கர்
9. தான்யமாலினி
10. மாகன்.

# வேதாந்த ஸாரம்

## ஸதானந்த யோகிந்த்ரர்

வேங்கடகணபதி சர்மா

### அத்யாஸ அபவாதம் 4

A zµ P [ Põ¯õ® ÷Põ å: ¨µvÁ\wv ÁõU¯Ázá í À» ñ nõ¤ | é [ Pa\÷u \ 159

*கங்காயாம் கோஷ ; கங்கையில் மாட்டுதொழுவம் என்னும் வாக்யத்தைப் போல் தத்வம் அஸி வாக்யம் பொருந்தாது.*

uzµ x P [ Põ ÷Põ è ÷¯õµõuõµ B ÷u¯ A £õÁ » ñ n ì ¯ ÁõU¯õºu ì ¯ A ÷\ å ÷uõ Â ¸ zuzÁõz ÁõU¯õºu©÷\÷ å å u: £ › z¯ ä¯ uz é ®£¢wvµ» ñ nõ¯õ A ² UuzÁõz á í À» ñ nõ | é [ Pa\÷u » 160

*கங்கையில் மாட்டுத் தொழுவம் என்னும் வாக்யத்தில் இரு பதங்களும் ஆதார ஆதேயமாக உள்ளன. கங்கையில் என் பதில் கரை என்னும் பதத்தை வருவித்து கொண்டால்தான் பொருளாகிறது. தத்வமஸி வாக்யத்திற்கு இது பொருந்தாது.*

A zµ x £÷µõ ñ A £÷µõ ñ ø \u ß¯ HPzÁ » ñ n ì ¯ ÁõU¯õºu ì ¯ £õP ©õz÷µ Â÷µõuõz £õPõ¢uµ©¤ £ › z¯ ä¯ A ß¯ » ñ nõ¯õ A ² UuzÁõz | é [ Pa\÷u » 161

*தத்வமைஸி வாக்யம் இரு சைதன்யங்களும் ஒன்றே என்று கூறும்போது கங்கைக் கரையில் தொழுவம் என்னும்போது ஒரு பாகத்தை மட்டும் குறிக்கிறது. எனவே பொருந்தாது.*

| \ P [ Põ£u® ì Áõºu £ › z¯õ÷PÚ wµ£uõºu® ¯uõ » ñ ¯v uuõ uz£u® zÁ® £u® ì Áõºu£u z¯õ÷PÚ zÁ® £uõºu® uz£uõµu® Áõ » ñ ¯zÁu: S÷uõ á í À» ñ nõ | é [ Pa\u Cv Áõ ì ¯®›162

*இங்கே கங்கா என்பது கங்கையின் கரை என்று லக்ஷ்யார்தமாய் இருப்பது போல் தத் பதமும் த்வம் பதமும் வாஸ்யார்ததை விட்டு லக்ஷ்யார்தத்தைக் காட்டுகிறது.*

uzµ wµ£uõ ì µÁ÷ n Ú uuõºu A ¨µwöu Í » ñ Ú ¯õ uz£µwuõ¨÷µ ñ õ ¯õ©¤ uz zÁ® £u÷¯õ; ì ¹ ¯©õ n z÷Á Ú uºu¨µwöu Í » ñ n ¯õ ¦Úµß ¯uµ£÷uÚ A ß ¯uµ £uõµu¨µwv A÷£ ñ õ £õÁõz.

*தீரம் அதாவது கரை என்னும் பதத்தை வருவித்து கொண்டு கங்காயாம் கோஷ: வாக்யம் புரிந்துகொள்ளப்படும். தத்வமஸி வாக்யம் வெளியிலிருந்து ஒரு பதத்தை சேர்ப்பதால் தெளிவு தராது. எனவே அ ஜஹல்லக்ஷணை இங்கு பொருந்தாது.*

(தொடரும்)



■ ''ஸ்வதேச ஸம்ஸ்க்ருதி, விதேச விக்ஞானம்''''. தேவையானபோது வெளிநாட்லேர்ந்தும் விக்ஞானத்தை வைத்துக் கொண்டு - Indigenous என்று சொல்கிறார்களே அந்த விதத்திலே நாமே இங்கு ஆராய்ச்சி மேற்கொண்டு செய்து, நல்ல புதிய புதிய தொழில் நுட்பத்தையும் கண்டு பிடித்து தன்னிறைவு என்று சொல்கிறார்கள், அந்த விதத்திலே, சொந்த காலிலே, நிற்பதற்காக, வேண்டிய வைத்தியத் துறையிலே, சிறந்த நாடாஹ, பிறருக்கும் உதவி செய்யக்கூடிய நாடாஹ இந்தியா வளர்ந்தால் பிறருக்கு உதவி தான் செய்யும்.

■ சங்கராச்சாரியார் சொல்லும்பொழுது

■ कुत्रविधेयो यत्न :– எங்கு முயற்சி செய்யப் வேண்டும். विद्याभ्यासे, सदौषधे, दोने கல்வியிலே, நல்ல மருந்தை அளிப்பதிலே, அதாவது, வைத்திய சிகித்சை அளிப்பதிலே, மூன்றாவது charity.

# மகாபாரத சுருக்கம்

**பாரதக் கதையை மூலமட்டும் சுருக்கமாக இங்கே தருகிறோம். டாக்டர் வே. ராகவன் தொகுத்துத் தந்ததை தமிழில் மொழி பெயர்த்து அளிக்கிறோம். மொழி பெயர்ப்பாளர் ஜயவிஜயா**



சூதாட்டத்தில் தோற்றபின் குந்தி தேவியை ஹஸ்தினாபுரத்திலேயே விட்டு விட்டு வடக்குத் திசை நோக்கி பாண்டவர்கள் தங்கள் குரு தௌம்யருடனும் த்ரௌபதியிடனும் வனம் ஏகினர்.

பாண்டவர்கள் போவதைப் பார்த்த மக்கள் இங்கு ஏன் இருக்க வேண்டும். நாமும் அவர்களுடன் செல்வோம் என்று பின் தொடர்ந்தனர்.

அவர்களிடம் யுதிஷ்டிரர் கூறுவார்

பிதாமஹர் பீஷ்மரும், அரசர் த்ருதராஷ்ட்ரரும், விதுரரும், குந்தியும், நண்பர்கள் பலரும் ஹஸ்தினாபுரத்திலேயே உள்ளனர். அவர்கள் நம் நலனுக்காக காக்கப்பட வேண்டியவர்கள். இவ்வளவு தூரம் வந்து விட்டீர்கள். என்னுடைய திரும்புதலை எதிர்பார்த்து நாட்டிற்குச் செல்லுங்கள்.

அவரால் ப்ரார்த்திக்கப்பட்ட மக்கள் மிகவும் துக்கத்துடன் அவர் சொன்னதின்படி வேண்டாவெறுப்பாக திரும்பிப் போக பாண்டவர்கள் காம்யக வனம் என்னும் வனத்தை அடைந்தனர்.

பல மிருகங்கள் நிறைந்த அவ்வனத்தில் முனிவர்களுடன் சாந்தப்படுத்தப்பட்டு நாட்களைக் கழித்தனர்.

பாண்டவர்கள் வனம் போயினர் என்று தெரிந்தவுடன் போஜர்களும் வ்ருஷ்ணி குலத்தோரும், ஆந்த்ரர்களும் துக்கத்தில் இருந்த அவர்களிடம் வந்தனர். பாஞ்சாலத்தின் அரசனின் புதல்வன் த்ருஷ்டத்த்யுமனும் அங்கு வந்தான். அப்போது யுதிஷ்டிரரைச் சுற்றி க்ருஷ்ணன் தலைமையில் கூடிப் பேசினார்கள். அப்போது மிகவும் துக்கத்துடன் த்ரௌபதி க்ருஷ்ணனைப்பார்த்துக் கூறினாள்.

வாஸுதேவ ஹ்ருஷீகேசனே உன்னிடத்தில் ஸர்வம் நிலைபெற்றுள்ளது. மதுஸூதனனே உன்னிடத்தில் என் குறையைச் சொல்கிறேன். பாண்டவர்களின் மனைவியும் உன்னுடைய நண்பியும் வீரனான த்ருஷ்டத்யும்னனின் தங்கையுமான என்னை எப்படி சபையில் அசிங்கப்படுத்தினர்.

என்னைத் தாசியாக ஆக்கி அனுபவிக்கத் திட்டமிட்டனர். சாதாரண பாமரன் சிறிதளவு வீரத்துடன் இருப்பவன் கூட தன் மனைவியை ரக்ஷிக்கிறான். இது தர்மமே. இந்த பாண்டவர்கள் தன்னை அண்டியவர்களைக் கைவிட்டதே இல்லை. அவர்களிடம் அர்ப்பணித்த என்னை சபையில் கைவிட்டுவிட்டனரே. அதர்ம வழியில் அரசாட்சி போயிற்று. அப்படியே அடிமைகளானோம். ஒற்றைத் துணியுடன் வனம் வந்தோம். சபையில் நான் அவமானப்படுத்தப்பட்டேன். என்ன பலம் பீமனுக்கு? என்ன பலம் அர்ஜுனனுக்கு? பெரும் குலத்தில் பிறந்த நான் சபையில் அவமதிக்கப்பட்டேன். மானஸ்தியான ஒருத்தி உயிர் வாழ்வாளா?

எனக்குப் பதிகள் இல்லை, புத்ரர்களும் இல்லை, பந்துக்களும் இல்லை, அப்பனும் இல்லை, அண்ணனுமில்லை, க்ருஷ்ணா நீயுமில்லை.

ஸம்பந்தம், கௌரவம், நட்பு, ஈஸ்வரத்வம் இந்த நான்கு காரணங்களால் நான் உன்னால் ரக்ஷிக்கபடவேண்டும். ''

(தொடரும்)



# அத்வைத ஸித்தாந்த வினா விடை

**வினா :- சீவப் பிரம்மைக்யத்தைப் பற்றிக் கூறுஞ் சங்க நூல் உண்டோ?**

**விடை :-** *மதுரைக்காஞ்சியில், சிறந்த வேதம் விளங்கப்பாடி*
*விழுச்சீ ரெய்திய வொழுக்கமொடு புணர்ந்து*
*நிலமமர் வையத் தொருதாமாகி*

*என மாங்குடி மருதனார் கூறுகின்றனர்.*

**வினா:- அதைப்பற்றித் திருமுறைகள் கூறுகின்றனவா?**

**விடை :-** *திருஞான சம்பந்தர்,*

*'பத்திப்பேர் வித்திட்டே '' (திருக்கழுமலம், திருத்தாளச்சதி, 7.)*
*எனத் தொடங்கும் தேவாரத்தில்,*
*...மெய்ப் பரம்பொருள்*
*சேர்வார் தாமே தானாகச்செயுமவ னுறையுமிடம்*
*என்று கூறுகிறார்.*

*மாணிக்கவாசகர்*

*''சிந்தைதனைச் தெளிவித்துச் சிவமாக்கி' (கண்டபத்து 4) என்றும்,*
*'சித்தமலமறுவித்துச் சிவமாக்கி ') (அச்சோப் பதிகம் 1) என்றும்*
*'உரைக்கின்றார்.*

*திருமூலர் தமது திருமந்திரத்தில்,*

*''நானென நீயென வேறில்லை ) (சம்பிரதாயம் 11) என்றும்,*
*'தானே சிவமான தன்மை தலைப்பட' (நின்மலாவத்தை 11) என்றும்,*
*சீவனெனச் சிவனென்ன வேறில்லை*
*சீவனார் சிவனாரை யறிகிலர்*
*சீவனார் சிவனாரை யறிந்தபின்*
*சீவனார் சிவனாயிட் டிருப்பரே*

*என்றும் திருவாய் மலர்ந்தருளியிருக்கிறார்.*

**வினா - இன்னும் யாருடைய வாக்கும் ஆதாரமாயிருக்கிறது?**

**விடை:** *' முச்சகமே யாதி முழுதுமகண் டாகார*
*சச்சிதானந்த சிவந்தானென்ப தெந்நாளோ'' (நிலைபிரிந்தோர். 8)*
*''நீ யென நானென வேறில்லை'' (பாயப்புலி, 58)*

*என்னும் தாயுமானவர்வாக்குகளுஞ் சான்றாயிருக்கின்றன.*

# 5. பரம்பொருள் நிர்க்குணமானது

**வினா :- பரம்பொருள் சகுணமா? நிர்க்குணமா?**

*விடை :-- பரம்பொருள் உண்மையில் நிர்க்குணமானது. இது அத்வைதத்தின் கொள்கை.*

**வினா :-பரம்பொருள் சகுணமானதே என்று கூறினால் என்ன ?**

***விடை:-*** *அவ்வாறு கூறினால், பரம்பொருளல்லாததும் பரம்பொருளைப் போன்று அழியாததுமான ஒரு குணகணத்தை ஒப்புக்கொள்ள வேண்டிவரும். உண்மையில் எல்லாம் பரம் பொருளாதலின் அக்குணகணமும் பரம்பொருளே. குணங்கள் வேறு, குணங்களையுடைய அப்பரம்பொருள் வேறு என்ற வேற்றுமையில்லாததால், குணபரிபூர்ணமான அப்பரம்பொருள் நிர்க்குணமே.*

**வினா:- பரம்பொருளல்லாதது ஏதேனும் உண்டோ?**

*விடை :- இல்லை. இருக்குமாயின், பரம்பொருள் நிர்க்குணமானது என்பது பொருந்தாது. இதனாலேயே பரம்பொருள் நிர்க்குணமானது என்பதும் நிச்சயிக்கப்பட்டிருக்கிறது. இவ்விதமான நிர்க்குண பூர்ண ஸாக்ஷாத்காரம், அவரை ஸகுணமாகக் கொண்டு உபாஸித்து அருள் பெறுவதனாலே தான் ஏற்படுகிறது.*

**வினா :- இதற்கு ஏதேனும் ஆதாரம் உண்டா ?**

*விடை:- இளமதி புனைந்த ஈசன தருளால்*
*அத்துவித வாசனை ஆடவர்க் குண்டாம்*
*மற்றெவ்வகையினும் இல்லவே இல்லை*

*என்னும் அப்பைய தீக்ஷிதர் வாக்கு முன்னரே எடுத்துக் காட்டப்பட்டிருக்கிறது.*

*பரம்பொருளின் நிர்க்குணத்தன்மை*

*இப்படியன் இந்நிறத்தன் இவ்வண்ணத்தன்*
*இவனிறைவன் என்றெழுதிக் காட்டொணாதே*

*(6. அண்டமுங் கடந்த, 10)*

*என்று திருநாவுக்கரசர் விளக்கியிருக்கிறார்.*

*(தொடரும்)*

# ஸ்ரீ ஜயதேவரும் அவர் அருளிச் செய்த கீத கோவிந்தமும்

**பாகம்-2**

ÿ |õµõ¯ nwºzu¸® AÁº A¸ Îaö\´u
ÿQ¸è n½»õ uµ[Qo ²®

*9. இவ்விரண்டு நூல்களுமே பகவான் ஸ்ரீகிருஷ்ணரால் அங்கீகரிக்கப்பட்டவைகளே. ஸ்ரீஜயதேவர் கீத கோவிந்தம் 10 ஸர்கம், வஸ்தி யதி கிஞ்சிதபி ' என்ற 19வது அஷ்டபதி எழுதிக் கொண்டிருக்கும் போது 7வது சரணத்தில் ஸ்ரீ ஜகன்நாதரே ஸ்ரீஜயதேவர் ரூபத்தில் வந்து, 'ஸ்மரகரல கண்டனம் மம ஸிரஸி மண்டலம் தேஹி பத பல்லவ முதாரம் ஜ்வலதி மயி தாருணோ மதனகதநாருணோ ஹரது தருபாஹித விகாரம் ப்ரியே சாருபபிலே முஞ்ச மயி மானமநிதானம்'' என்ற வரிகளை எழுதினார் என்று கூறுவர். இது ஒன்றே போதுமே கீத கோவிந்தம் ஒரு தெய்வீக காவ்யம் என்பதற்கு. 10.ஸ்ரீநாராயண தீர்த்தரின் ஸ்ரீகிருஷ்ணலீலா தரங்கிணியின் ஒவ்வொரு பாடலையும் சலங்கை ஒலி ஸப்திக்கச் செய்தும் 'கோபாலமேவ தைவதம் பாடும் போது ஸ்ரீ தீர்த்தருக்கு திவ்ய திருஷ்டியைக் கொடுத்து திவ்யதரிஸனம் கொடுத்தும் பகவான் ஸ்ரீகிருஷ்ணர் அங்கீகரித்தார் என்பது ஒன்றே போதுமே இந்நூல் ஒரு தெய்வீக காவ்யம் என்பதற்கு. மேலும் கிருஷ்ணருக்மிணி விவாஹத்துடன் முடிக்கச் சொன்னதும் ஸ்ரீகிருஷ்ணரே என்பது குறிப்பிடத்தக்கது. ஸ்ரீநாராயண பட்டத்திரி அருளிய ஸ்ரீநாராயணீயமும் தரங்கிணியைப் போலவே பகவான் ஸ்ரீகிருஷ்ணரால் முழுவதும் அங்கீகரிக்கப்பட்ட நூலாகும்.*

*11.ஸ்ரீஜயதேவர் கீத கோவிந்தத்தில் ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மாவைக் குறித்தே எல்லாப் பாடல்களையும் பாடியுள்ளார். மற்ற தெய்வங்களைப் பற்றிப் பாடவில்லை. ஸ்ரீகிருஷ்ண லீலைகளை வர்ணிக்கும்போதே மற்ற தேவதைகளையும் துதிப்பது தரங்கத்தின் தனிச்சிறப்பு. இந்த சகுண வழிபாடே நாளடைவில் தனக்குத்தானே நிர்குண பரப்ரஹ்ம உபாஸனையாக மாறும். உதாரணமாக ஜீவன் முக்தரான ஸ்ரீசுகப்ப்ரஹ்மம் நிர்குண பரப்ப்ரஹ்ம உபாஸனையில் தீவிரமாக ஈடுபட்டவராயினும், ராஜா பரீக்ஷித்திற்கு பாகவதத்தை - கிருஷ்ணலீலைகளை உபதேஸித்தார், ஒவ்வொரு லீலையிலும் தன் உள்ளத்திலுள்ள பரப்ப்ரஹ்மத்தை நினைவு கூறுகிறார். ஸ்ரீ சுகரைப்போலவே ஸ்ரீநாராயண தீர்த்தரும் அப் பரப் ப்ரஹ்மத்தை நினைவுகூர்ந்தே பரம்பொருளின் சகுண வடிவங்களைத் துதித்து தன் பாடல்கள் மூலம் வழிபட்டுள்ளார். ஸ்ரீகிருஷ்ண லீலைகளை வர்ணிக்கும்போதே மற்ற தேவதைகளையும் துதிப்பது இதன் தனிச்சிறப்பு.*

*12 முதலாவது தரங்கத்தில் 'ஜய ஜய ஸ்வாமின் 'என்ற கீதத்தில் கணபதியையும், துர்கே துர்கதி ஹாரிணி' என்ற ஸ்லோகத்திலும் 'ஜய ஜய துர்கே' என்ற கீதத்திலும் துர்காதேவியையும், 2வது தரங்கத்தில் 'மங்களானி தனோது மதுஸுதனஸதா 'என்ற கீதத்தில் கங்காதரன் தக்ஷிணாமூர்த்தி, துர்கா ஸரஸ்வதி, கங்கா சிவன், ஆகிய தேவதைகளையும் துதித்துள்ளார். 6, 7ம் தரங்கங்களில் நரஸிம்ஹரையும் துதித்துள்ளார். முதலாம் தரங்கத்தில் 'ஸர்வக்ஞானக்ரியா சக்திம்' என்ற ஸ்லோகம் 5ல் மஹாவிஷ்ணுவையும், 3ம் கீதத்தில் வராஹபுரி வெங்கடேச பெருமாளையும் துதித்துள்ளார்.*

*13.ஸ்ரீஜயதேவர், கீத கோவிந்தத்தில் முதல் அஷ்டபதியில் பகவானின் பத்து அவதாரங்களை வர்ணித்துள்ளார். இதில் புத்த அவதாரத்தையும் சேர்த்து உள்ளார். மேலும் இந்த பத்து அவதாரங்களையும் ஸ்ரீ கிருஷ்ணன் தான் செய்தார் என்று கூறுகிறார். முதல் அஷ்டபதியில் ஓவ்வொரு அவதாரத்தை பற்றி சொல்லும் போதும் 'கேசவா தருத' கேசவன் தரித்த - என்று கூறி அந்த அந்த அவதாரத்தை வர்ணிப்பதன் முலம் ஸ்ரீ கிருஷ்ணன் பூர்ண பரமாத்மா என்று எடுத்துக்காட்டுகிறார். மேலும் 'வேதானுத்தரதே' என்று தொடங்கும் ஸ்லோகம் 5ல் தெளிவாக வராக அவதாரம் எடுத்து வேதத்தை மீட்டவனான ஸ்ரீ கிருஷ்ணன் பத்து அவதாரங்களை எடுத்தான் அவனுக்கு நமஸ்காரம் கிருஷ்ணாய துப்யம் நமஹ - என்று கூறுகிறார்.*

*14. ஸ்ரீ தீர்த்தர் 'அதிகருணா வித்ருதாத் புத ரூபா'' என்ற சொற்றொடரால் பகவானின் அவதாரங்களை விளக்கியுள்ளார். மேலும், தன் நூல் முழுவதிலும் ஸ்லோகத்திலும், சூர்ணிகையிலும் கீதத்திலும் ஸ்ரீகிருஷ்ணன் பிறப்பு இறப்பு அற்றவன் எங்கும் நிறைந்திருப்பவன் ப்ரஹ்மாண்டங்களைத் தாங்கி நிற்பவன், நிலையான ஆனந்த வடிவு உடையவன் தன் அடியார்களைக் காப்பாற்ற மாயையால் பல அவதாரங்களைச் செய்தவன், அஹம் ப்ரஹ்மாஸ்மி, தத்வமஸி என்ற மஹாவாக்யங்களால் ஏற்படும் ஞானத்தால் உணரப்பட்டவன் என்ற கருத்தை 'ஸகல நிகமாந்த ஜனிதாந்தமதி விதிதம்' என்று கூறியுள்ளார். ஸ்ரீமத் பாகவதமும் இதே கருத்தை, 'பெரிய நீர் தேக்கத்திலிருந்து எப்படி சிறிய கால்வாய்கள் ஆயிரம் தோன்றுகின்றதோ, அது போல மத்ஸ்யம் முதல் கல்கி அவதாரங்கள் அனைத்தும் ஸ்ரீகிருஷ்ண பரமாத்மாவிடமிருந்து தோன்றியவைகளே. ஸ்ரீ கிருஷ்ணபரமாத்மா பரிபூரண தத்வம். மற்ற அவதாரங்கள் அவருடைய அம்ஸங்களே.' என்று கூறுகின்றது. (பாகவதம் ஸ்க 1 அத்யா.3-ஸ்லோ.26- 28)*

*15.ஸ்ரீ தீர்த்தர் தன் நூலின் துவக்கத்தில் முதல்தரங்கத்தில் 'ராம கிருஷ்ண கோவிந்த' எனத் தொடங்கும் கீதம் 6ல், ஸனகாதி யோகிகள் 'ராம கிருஷ்ண கோவிந்த' என்று*

கூறிக்கொண்டு ஸ்ரீமந் நாராயணனுடைய ஸந்நிதிக்கு வந்தனர் என்றும் நூலின் முடிவிலும் தரங்கம் 12ல் தரு 8ல் கிருஷ்ணனிடம், ருக்மிணிக்காக தூது சென்ற அறிவாளியான அந்தணர் 'கோவிந்த ராம் கோவிந்த ராம என்று பகவானின் திருநாமங்களைக் கூறிக்கொண்டு வருகிறார் என்று வர்ணித்து கலியுகத்தில் நாமஸங்கீர்தனம் என்ற எளிதான வழியில் கடவுளை அடையமுடியும் என்பதால் மற்ற முன்று யுகங்களிலும் பிறந்தவர்கள் கலியில் பிறக்க வேண்டும், அதிலும் புண்ணிய நதிகளான காவேரி, தாமிரபரணி ஓடும் திராவிட நாட்டில் பிறக்க வேண்டும் என்று பாகவதம் ஸ்க -11 அத்யா 5 ஸ்லோ.38-40ல் கூறப்பட்டதை நினைவு கூர்கிறார். ஆழ்வார்கள், நாயன்மார்கள் இவர்களின் பாடல் பெற்ற பலக்ஷேத்திரங்கள் உள்ள திராவிட நாட்டில் காளிந்தி நதி பாயும் வராஹபுரி பூலோக வைகுண்டம் என்று பெயர் பெற்றதற்கு இவையே சான்று.

16. இந்த இரண்டு நூல்களுமே ஒப்பு உயர்வு அற்ற அமரகாவியங்களாகும். இரண்டும் தெய்வீக மணம் வீசும் உயர்ந்த காவியங்கள், இதில் எது சிறந்தது என்ற கேள்விக்கே இடமில்லை. ஒருவனின் இருகண்களில் எது சிறந்தது என்று கூற இயலாது. ஏனெனில் இயல்பான பார்வைக்கு, மனிதனுக்கு இருகண்களுமே முக்கியமானது. அது போல ஸ்ரீஜயதேவரின் கீதகோவிந்தமும், ஸ்ரீநாராயண தீர்த்தரின் ஸ்ரீகிருஷ்ணலீலா தரங்கிணியும், பாகவத சமுதாயத்தின் இரண்டு கண்களைப்போன்றவை. இவை இல்லாத பஜனை சம்பிரதாயமே இருக்க முடியாது. ராதாகல்யாணம், திவ்யநாமம் தீபப்ரதக்ஷிணம் போன்ற நிகழ்ச்சிகளிலும் இவை இரண்டும் முக்ய பங்கு வஹிக்கின்றன. நாமும் இவ்விரண்டு கிருஷ்ண ஸாகரத்தில் முழ்கித் திளைத்து பரமானந்தம் பெற அந்த ஸ்ரீகிருஷ்ணபரமாத்ம ஸ்வரூபியான வராஹபுரி ஸ்ரீ தேவி பூமிதேவி ஸமேத ஸ்ரீ வேங்கடேச பெருமாளையும், ஸ்ரீ ஜயதேவ கவியையும், ஸ்ரீநாராயண தீர்த்தரையும் வணங்கி வழிபடுவோமாக.

'நவநீத சோராய நந்தாதி கோப கோரக்ஷிணே கோபிகாவல்லபாய,
நாரதமுனீந்த்ரனுத நாமதேயாயதே நாராயணானந்த தீர்த்த குரவே'

என்று அந்த ஸ்ரீகிருஷ்ணபரமாத்மாவிற்கும், ஸ்ரீநாராயண தீர்த்த குருவிற்கும் மங்களம் பாடி நிறைவு செய்வோம்.

**இக் கட்டுரை, திருவையாறு P. நடராஜ ஸர்மாவும்,**
**கும்பகோணம் M.S. கோபாலகிருஷ்ண ஸர்மாவும் இணைந்து**
**வரஹாபுரி ஸ்ரீதேவி பூமிதேவி ஸமேத வேங்கடேசப் பெருமாளிடமும்,**
**ஸ்ரீநாராயண தீர்த்தரிடமும் கொண்ட பக்தி மேலீட்டால் எழுதப்பட்டது.**

# ஸ்ரீமத் பாகவதம் காட்டும் வாழ்க்கை நெறி 1

ராமாயணம் ஸ்ரீனிவாசன்

ஸ்ரீமத் பாகவதம் ராமாயண பாரதம் போல் ஸ்ரீவிஷ்ணுவின் பெருமை பேசும் க்ரந்தம். பக்தி சுவை நனி சொட்ட சொட்ட விஷ்ணுவின் பெருமையை பேசும். நல் வாழ்க்கையை மனிதன் வாழ சில விஷயங்களை மனிதன் கடைபிடிக்கவேண்டும். அந்த வழி முறைகளை பாகவதம் ஆங்காங்கே கூறுகிறது. அவற்றைத் திரட்டி கொடுக்க முயலுகிறேன்.

**1. மனிதன் வாழ்வில் என்ன வேண்ட வேண்டும்?**

யாவரும் சுகமாயிருக்கவேண்டும், நோயற்றவர்களாய் இருக்க வேண்டும், மங்களங்களையே யாரும் பார்க்க வேண்டும், ஒருவரும் துயரம் அடையாமல் இருக்க வேண்டும்.

**2. உபன்யாஸங்களை எப்படிக் கேட்க வேண்டும்?**

தனது குருவின் வாக்கில் ஆழ்ந்த நம்பிக்கை, தன்னை உயர்ந்தவனாய் கருதாமல் அடக்கமுடையவனாயிருத்தல், உள்ளத் தூய்மை, மனவடக்கம், பகவானின் கதைகளை ஒன்றிய மனதுடன் கேட்டல், இந்த வழிமுறைகளைக் கடைபிடிக்க வேண்டும். அப்போதுதான் கதை கேட்ட பலன் கிடைக்கும். 1-5 75, 76

**3. மனிதனின் வாழ்வில் எதெல்லாம் வீண்**

உறுதிப்படாத ஞானம் வீண், மன ஈடுபாடு இல்லாத கேள்வி, ஐயத்துடன் ஜபிக்கப்படும் மந்த்ரம், அமைதியில்லாத மனத்துடன் செய்யப்படும் ஜபம் இறை அடியார்கள் இல்லாத ஊர், தகுதி இல்லாத அந்தணர் இல்லாமல் செய்யப்படும் ஸ்ராத்தம், வேதம் ஓதாதவனுக்குச் செய்யும் தானம், நல்ல ஆசார அனுஷ்டானத்தை கைவிட்ட குலம் இவை எல்லாம் வீண். 1-5-73-74.

**4. எதை எதை வேண்டுவோர் யாரை பூஜிக்கவேண்டும்?**

வேதத்தில் அறிவு கூர்மை வேண்டுவோர் ப்ரம்மாவையும், மக்கள் பேறு வேண்டுவோர் ப்ரஜாபதியையும் செல்வம் வேண்டுவோர் துர்கா தேவியையும், ஒளி மயத்தை வேண்டுபவன் அக்னியையும், செல்வத்திற்கு அஷ்ட வஸுக்களையும், வீரத்திற்கு ருத்ரனையும், உணவிற்கு அதிதியையும் ஸ்வர்கத்திற்கு பன்னிரெண்டு ஆதித்யர்களையும், அரசாட்சிக்கு விஸ்வே தேவர்களையும், குடிமக்கள் தன்பக்கமே இருக்க ஸாத்யர்களையும் பூஜிக்க வேண்டும். நீண்ட ஆயுளுக்கு அஸ்வினீ தேவர்களையும், வலிமைக்கு பூமா தேவியையும், நிலைத்து இருக்க உலகங்களின் தாய் தந்தையரான ஆகாயத்தையும், பூமியையும் வணங்க வேண்டும்.

(தொடரும்)

# ப்ரபோத சிந்தாமணி 1

ஆயுஷ்மன்

தர்மம் தர்மம் என்று நிறைய இடங்களில் சொல்லப்படுகிறது. அவர் தர்மவான் அவள் தர்மவதி என்று சொல்லிகிறார்கள். தானம் நிறைய செய்பவர்களை தர்மவான் என்று புகழ்கிறார்கள். ஒரு தீங்கு இழைக்கப்பட்டால் ஏன் சார் இது தர்மமா, ந்யாயமா என்றும் கேட்கிறார்கள். இப்படி பல வேறு அர்த்தங்களைக் கொண்டிருக்கும் இப்பதிற்கு உண்மையான பொருள் என்ன? தர்மத்தின் லக்ஷணம் தான் என்ன?
தாரணாத் தர்மம் இதி உச்யதே. எது தாங்குகிறதோ அது தர்மம் எனப்படும். வாழ்க்கையில் மனிதர்கள் பலவிதமான வேலைகளில் ஈடுபடுகின்றனர்.பரபரப்புடன் இயங்கிகொண்டே இருக்கின்றனர். சில அடிப்படை உண்மைகள் ஒழுக்கமுறைகள் இவைகளை எண்ணிப் பார்ப்பதில்லை. நமது தர்ம சாஸ்த்ரம் எல்லா மனிதர்களுக்கும் பொதுவான தர்மங்களைக் கூறும். மனு தன் தர்ம சாஸ்த்ரத்தில் தர்மத்தின் லக்ஷணத்தை இப்படி கூறுகிறார்.

**''அஹிம்ஸா ஸத்யம் அஸ்தேயம் சௌசம் இந்த்ரிய நிக்ர:**
**ஏதம் ஸாமாஸிகம் தர்மம் சாதுர்வர்ண்யே அப்ரவீன் மனு:''**

இந்த ஐந்தைத்தான் அவர் எல்லாருக்கும் பொதுவான அறமாக வைத்தார். வெவ்வேறு தொழில் செய்பவர்கள் தங்கள் வேலைக்கேற்ப சிலவற்றை மீற நேரிடலாம். ஆனால் அடிப்படையான இந்த ஐந்திலிருந்து மீறக்கூடாது. இதுபற்றி பெரியவா கூறுகிறார். தானம், சந்த்யாவந்தனம் பூஜை, பரோபகாரம் எல்லாம் நல்லதில் மனதைச் செலுத்தும் பகிரங்க சாதனைகள். அதற்கு அனுகூலமாக இருக்கும் அந்தரங்க சாதனைகள் ஐந்து. அஹிம்ஸை, ஸத்யம், அஸ்தேயம், சௌசம், இந்த்ரிய நிக்ரஹம் என்பவை.

யாருக்கும் கெடுதல் இல்லாமல் மனஸை அன்புமயமாக வைத்துக் கொள்ளுதல் அஹிம்ஸை. மனம், வாக்கு, காயம் இம்மூன்றையும் உண்மையிலேயே ஈடுபடுத்துவது ஸத்யம். அஸ்தேயம் என்றால் திருடாமல் இருப்பது என்று பொருள். பிறர் பொருளில் ஆசை வைக்காமல் வைராக்யமாக இருப்பது. சௌசத்தில் ஸ்னானம், மடி, ஆசாரங்கள் அடங்கும். ஒவ்வொரு இந்த்ரியத்துக்கும் இவ்வளவுதான் ஆகாரம் தருவது என்று நியமம் செய்துகொண்டு புலங்களை அடக்குவது இந்த்ரிய நிக்ரஹம். நமது மதத்தின் சகல பிரிவினர்களுக்கும் பொதுவான இந்த ஐந்து சாமான்ய தர்மத்தை அவர்கள் அனுஷ்டிக்கவேண்டுமென்பது மனு தர்மம். தர்மோ ரக்ஷதி ரக்ஷித: இந்த தர்மங்களை யார் கடைபிடிக்கிறார்களோ அவர்களை இந்த தர்மம் காப்பாற்றும். இதில் ஏதேனும் ஒன்றையாவது நாம் கடைபிடித்தால் போதும் அந்த தர்மமே நம்மைக் காப்பாற்றும். செய்ய முயலுவோம்.

# சிந்தனை 1

நசிகேதஸ்

***ஈசாவாஸ்யமிதம் ஸர்வம் யத்கிஞ்ச ஜகத்யாம் ஜகத்***
***தேன த்யக்தேன புஞ்சீதா: மா க்ருத கஸ்யசித் தனம் ।।***

*ஈசோபனிஷத்தின் முதல் மந்த்ரம் ஈஸ்வரனே எல்லாம் என்று கூறுகிறது. இந்த அண்டம் முழுவதும் சராசரங்கள் அனைத்தும் ஈஸ்வரனே. பொதுவாக முதல் வாக்யத்திற்கு ஈஸ்வரன் எங்கும் வ்யாபித்துள்ளான் என்று அர்த்தம் செய்யப்படுகிறது. உண்மையில் ஈஸ்வரனால் இவ்வுலகம் போர்த்தப்படவேண்டும் என்பது தான் ஸ்ரீசங்கரரின் உரை. அதுவே சரியானது.ஏனெனில் அனைவரும் லோகத்தில் வ்யாபாரங்களில் மயங்கி ஆதார பூதமான ஈச்வரனை மறந்துவிட்டு இந்த உலகமே சத்யமென்று நம்புகிறார்கள்.*

*இந்த மாயையை போக்கவே ஈச்வரனால் இவ்வுலகம் மூடப்பட வேண்டும் என்று உபனிஷத் கூறும். ஈஸ்வரனைச் சார்ந்தே இந்த உலகம். ப்ரம்மம் இல்லாமல் உலகம் இயங்காது. தனது சத்ஸ்லோகியில் ஸ்ரீ சங்கரர் (41ஆவது ஸ்லோகம்) மித்யையான ப்ரபஞ்சம் எதனால் ப்ரகாசிக்கிறதோ அந்த ஆத்மஸ்வரூபத்தால் ப்ரபஞ்சம் மறைக்கப்பட வேண்டும். இது முழுவதும் ஆத்மனில் த்யாகம் செய்யப்படவேண்டும். அப்படி செய்தால் மீதி இருப்பது ப்ரம்மமே. அதுவே ஆத்மஸுகம். மித்யையான தனம் முதலியவைகளில் ஆசை இருக்கக்கூடாது.*

***தேன த்யக்தேன புஞ்சீதா:*** *த்யாக புத்தியுடன் இவ்வுலகை அனுபவிக்க வேண்டும். அப்படியெனில் என்ன பொருள்? எதிலும் பற்றற்று நம் வேலைகளை செய்ய வேண்டும். ஈஸ்வரனைச் சார்ந்தது இவ்வுலகம் எனின் இது ஐஸ்வர்யமாகும். ஸம்ஸ்க்ருத மொழியில் தத்திதம் எனும் இலக்கண விதியின்படி எல்லாம் (நாம் அனுபவிக்கும் அனைத்தும் ஈஸ்வரனுடையதே. அதாவது நம் ஐஸ்வர்யம் அனைத்தும் ஈஸ்வரனுடையதே. மகாத்மா காந்தி இதை ட்ரஸ்டீஷிப் என்பார். சம்பந்தம் இருப்பினும் ஆசை வைக்காமல் கார்யங்களைச் செய்வது என்பதும் ஒரு மேலான பொருள். வேதங்களில் கூட ஹோமங்களில் உத்தேச த்யாகம் செய்யும் போது விஷ்ணவே இதம் ந மம ருத்ராய இதம் ந மம என்று கூறப்படுவது இதற்கு சான்றாகும்.*

*அடுத்ததாக எல்லாம் ஈஸ்வரன் என்றால் எந்த தனத்தை ஒருவன் விரும்புவான்?அவன் தனமே ஈஸ்வரனுடையது . இன்னொருவர் தனம்? அதுவும் பரமாத்மாவினுடையதே. இப்படி உபனிஷத் மக்களுக்கு ஓர் அரிய உபதேசத்தை தொடங்குகிறது. கர்ம காண்டத்தில்கூட இந்த உபதேசம் அனுஸ்யூதமாக பலவிடங்களில் வரும்.*

**''புருஷ ஏவ இதம் ஸர்வம்'' என்று புருஷ ஸூக்தமும் ''யச்ச** கிஞ்சித் ஜகத் ஸர்வம் த்ருஸ்யதே ஸ்ரூயதேபி வா'' என்று நாராயண ஸூக்தமும் கோஷிக்கும். இதற்கு விளக்கமாக ஸ்ரீருத்ரம் அனைத்துப் பொருளிலும் ஈஸ்வரனைக் காட்டும். வாக் அம்ப்ருணீ ஸூக்தத்தில் அம்பாளின் ப்ரபாவம் உலகை இயக்குகிறது என்பதைக் காட்டும்.இவைகள் சில சான்றுகள்தான். எனவே நாமும் ஈஸ்வரனால் உலகத்தை மூடுவோம். ஆத்ம ஸுகத்தில் பற்றற்று லோகத்தை அனுபவிப்போம்.

# எல்லாருக்குமான ஸூர்ய நமஸ்காரம்

*சாயாதேவி ஸமேத சூர்ய நாராயண ப்ரஸதார்தம் ஸூர்ய நம்ஸ்காரம் கரிஷ்யே*

*சுக்லாம்பரதரம் சசிவர்ணம் சதுர்புஜம் ப்ரஸன்ன வதனம்*
*த்யாயேத் ஸர்வ விக்னோப சாந்தயே ॥*
*குருர் ப்ரம்மா குருர் விஷ்ணு:குருர் தேவோ மஹேஸ்வர:*
*குருஸ்ஸாக்ஷாத் பரம் ப்ரஹ்ம தஸ்மை குரவே நம: ॥*

| | | | |
|---|---|---|---|
| *அர்ச்சனை* | *மித்ராய நம:* | *ரவயே நம;* | *ஸூர்யாய நம:பானவே நம:* |
| *ககாய நம:* | *பூஷ்ணே நம;* | *ஹிரண்யகர்பாய நம;* | *மரீசயே நம;* |
| *ஆதித்யாய நம;* | *ஸவித்ரே நம;* | *அர்காய நம:* | *பாஸ்கராய நம:* |

*ஸாயாஸ்மேத ஸ்ரீ ஸூர்ய நாராயண ஸ்வாமினே நம:*

*ஸ்தோத்ரம்*

*ஜயாய ஜயபத்ராய ஹர்யஸ்வாய நமோ நம;*

*நமோ நம:ஸஹஸ்ராம்சோ ஆதித்யாய நமோ நம; ॥*

*நம; பூர்வாய கிரயே பச்சிமாத்ரயே நம;*

*ஜ்யோதிர் கணானாம் பதயே தினாதிபதயே நம; ॥*

*ஸௌர மண்டல மத்யஸ்தம் ஸாம்பவம் ஸம்ஸார பேஷஜம்*

*நீலக்ரீவம் விரூபாக்ஷம் நமாமி சிவம் அவ்யயம்.*

*பானோ பாஸ்கர மார்த்தாண்ட சண்டரஸ்மே திவாகர*

*ஆயுராரோக்யம் ஐஸ்வர்யம் ஸ்ரீயம் புத்ரான்ச தேஹி மே ॥*

**நமஸ்காரம்**

*யானிகானி ச பாப்பனி ஜன்மாந்த்ரக்ருதானி ச*

*தானிதானி வினஸ்யந்தி ப்ரதக்ஷிண பதே பதே நச*

# ஸனாதன தர்மம் : கேள்வி பதில்கள்

ரா ஸ்ரீ

**101. கேள்வி : யஞ்யம் செய்ய வேண்டும் என்பதற்கு ப்ரமாணங்கள் உண்டா?**

தேவோ வ ஸவிதா ப்ரார்ப்பயது ஸ்ரேஷ்டதமாய கர்மணே
ஸ்ரேஷ்டதம கர்மம் யஞ்யம்
''பராத்ர் அகினிம் ஹுத்வா'' அக்னௌ ப்ராதர் ஜுஹோதி
''ய்ஞ்யாத் பவதி பர்ஜன்ய: பர்ஜன்யாத் அன்னம் தத அ;ப்ரஜா:
''ய்ஞ்யேன ய்ஞ்யம் அயஜந்த தேவா:'' ''ஸஹ ய்ஞ்யா ப்ரஜா
ஸ்ருஷ்டா:'' இவைகள் யஞ்யத்தின் பெருமை பேசும்.

யஞ்யமே இவ்வாழ்கைக்கு ஆதாரம். அதுவே மழை பொழிவிக்கும். ப்ராணிகள் அதனால் நலம் பெறுவர். செய்ய வேண்டியது அதுவே.

**101. கேள்வி : காலையில் எழுந்தவுடன் சொல்ல வெண்டிய ஸ்லோகம் என்ன?**

**பதில் :** ''கராக்ரே வஸதி லக்ஷ்மீ கரமத்யே ஸரஸ்வதி கரமூலே ஸ்திதௌ கௌரீ ப்ரபாதே கர தர்சனம்''

**102. கேள்வி : எழுந்து காலை பூமியில் வைக்கும்போது என்ன ஸ்லோகம்?**

பதில் : ''ஸமுத்ரவஸனே தேவீ பர்வத ஸ்தன மண்டிலே விஷ்ணுபத்னி நமஸ்துப்யம் பாதஸ்பர்சம் க்ஷமஸ்வ மே''

103. **கேள்வி :** உடல் சுத்தம் செய்து கொள்ளும் போது சொல்ல வேண்டிய ஸ்லோகம்?

பதில் : அபவித்ரோ வா பவித்ரோ வா ஸர்வாவஸ்தாம் கதோபி வா
ய: ஸ்மரேத் புண்டரீகாக்ஷம் ஸ பாஹ்யா அந்தர ஸுசி:
மானஸம் வாசிகம் பாபம் ஸ்ரீராம ஸ்மரணேனைவ வ்யபோஹதி ந ஸம்சய:''

**104. கேள்வி : ஸ்நானங்கள் ஏழு விதம் எனில் அவை யாவை?**

பதில் : 1. மந்த்ரஸ்னானம் ''ஆபோஹிஷ்டா'' மந்த்ரத்தைச்சொல்லி செய்வது
2. பௌம ஸ்னானம் மண் தேய்த்து குளிப்பது
3. ஆக்னேய ஸ்னானம் பஸ்மத்தைப் பூசிக் கொள்வது

4. வாயவ்ய ஸ்னானம் பசு குளம்பின் தூசியில் குளிப்பது

5. திவ்ய ஸ்னானம் மழை நீரில் குளிப்பது

6. வாருண ஸ்னானம் நீரில் மூழ்கிக் குளிப்பது

7. மானஸ ஸ்னானம் மனதில் நினைத்துக் கொள்வது.

**105. கேள்வி : ஸ்னானத்துக்கு அங்கமாகச் செய்யப்படும் தர்பண மந்த்ரம் என்ன?**

ஓம் ப்ரம்மாதயோ தேவான் த்ருப்யந்தாம் தான் தேவான் தர்பயாமி

ஓம் பூர்தேவான்ஸ் தர்பயாமி ஓம்புவர்தேவான் தர்பயாமி

ஓம் ஸர்வதேவான் தர்பயாமி ஓம் பூர்புவச்சர்வதேவான் தர்பயாமி.

ஓம் பூ: ருஷ்யச் தருப்யந்தாம்

ஓம் ஸனகாதித்வைபாயனாதயோ ருஷ்யஸ்த்ருப்யன்தாம்

ஓம் பூ: ருஷ்யஸ்த்ருப்யந்தாம்

ஓம் புவ:ருஷயஸ்த்ருப்யந்தாம்

ஓம்ஸ்வ:ருஷ்யஸ்த்ருப்யந்தாம் ஓம் பூர்புவஸ்வ;ருஷ்யஸ்த்ருப்யந்தாம்

ஓம் கவ்யவாஹனதயோ பிதரஸ்த்ருப்யந்தாம்

ஓம் பூ:பிதரஸ்த்ருப்யந்தாம் ஓம்புவ:பிதரஸ்த்ருப்யந்தாம்

ஓம் ஸ்வ:பிதரஸ்த்ருப்யந்தாம் ஓம் பூர்புவஸ்வ:பிதரஸ்த்ருப்யந்தாம்

**106. கேள்வி : ப்ராம்மணனின் வலக் காதில் உள்ள தேவதைகள் எவர் எவர்?**

பதில் : ப்ரம்மா, விஷ்ணு, ருத்ரன், சந்த்ரன், சூர்யன், வாயு ஆகிய 6 தேவதைகள்.

107. **கேள்வி :** பெண்கள் ஒவ்வொரு நாளும் தலைக்கு குளித்தல் அவஸ்யமா?

பதில் : தேவையில்லை. விசேஷ நாட்களில் குளித்தால் போதும். மற்ற நாட்களில் தலைக்கு மஞ்சள் நீரால் ப்ரோக்ஷணம் செய்து கொண்டால் போதும். இது சாஸ்த்ர சம்மதமே.

இதற்கு ஆதாரம்?

தேவல ஸ்ம்ருதி ‘‘

குலஸ்த்ரீது சிரஸ்ஸ்னானம் உத்ஸவே ஸ்னாது தைலத:

வாரே வா பைத்ருகே கர்மண் அன்யதா ஆகண்ட்ட ஸம்ப்லவா’’

(தொடரும்)